வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria ரியா பணப்பரிமாற்றும்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 15.02.2023 புதன்கிழமை | இதழ் : 68 | பக்கங்கள் : 16

## அவசிய சத்திர சிகிச்சைகளையும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, பெப். 15

நாட்டில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக் குறையை உடனடியாக தீர்க்காது விட்டால் எதிர் காலத்தில் அவசியமான சத்திர சிகிச்சைகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

அந்த சங்கத்தின் பேச் சாளர் சமில் சஞ்சீவ நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மயக்க மருந்து இல் லாததால் அத்தியாவசிய மற்ற சில சத்திர சிகிச்சை களை ஒத்திவைக்க முன் மொழியப்பட்டுள்ளது.

மயக்க மருந்து மற்றும் இதர உப கரணங் களின் தட்டுப்பாடு குறித்து பல மாதங் களுக்கு முன்பே 15

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, பெப். 14

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு நேற்று அறிவித்தது.**

தபால் மூல வாக்களிப் புக்கான வாக்குச் சீட்டு களை அச்சிடுவதற்கு தேவையான நிதி கிடைக் காததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேர்தல்கள் திணைக் களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் 15

# இலங்கை கடலில் மீன்பிடி இந்தியர்களுக்கு அனுமதி!

## நடைமுறை குறித்து பேசவும் முடிவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

**இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர் பாக கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா இலங்கை வந்த இந்தி யாவின் மீன் வளங்கள் இணை அமைச்சர் எல். முருகனுடன் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கலந்துரையாடினார் என்று அறிய வருகின்றது.** 15

## உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்?

கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட லாம் என்பதற்கான அறிகுறியாக, திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை முதல் தபால் மூல வாக்குச் சீட்டு களை விநியோகிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கட்சியின் பொதுச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

நேற்று கட்சியின் செயலாளர்களுடன் நடந்த சந்திப்பில், நாளை (இன்று) விநியோகிக்கப்பட விருந்த தபால் மூல வாக்குச் சீட்டுகள் விநியோகம் 15

## நிதி இல்லாதமையால் தேர்தல் தாமதமாகலாம்

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, பெப். 15

தேர்தலை தாமதப் படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோர வில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செய லாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வளாகத் தில் இருந்து வெளியேறும் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திவாலான நாட்டைக் கொண்டு நடத்தும் ஜனா திபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் எவ் வாறு நிதியை 15

## கருணாவின் வயலில் அமைத்த மின்வேலியால் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு, பெப். 15

கருணா என்று அறி யப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனுக்கு சொந்தமான வயல் காணி யில் அமைக்கப்பட்டி ருந்த சட்டவிரோத மின் வேலியில் சிக்கி காவ லாளி ஒருவர் உயிரிழந் தார் என்று பொலிஸா ரின் விசாரணயில் தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு - மணி வாசகர் நகரை சேர்ந்த 53 வயதான ஒருவரே இவ் வாறு உயிரிழந்தார்.

வனவிலங்குகளிட மிருந்து நெற்செய் கையை பாதுகாக்க 15

## அனைவரும் அழைத்தால் பிரதமர் பதவியை ஏற்பேன்!

### மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு



கொழும்பு, பெப். 15

அனைவரும் ஒன்றிணைந்து அழைத்தால் பிரதமர் பதவியை ஏற்க தயாராக உள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு 15

## 13ஆம் திருத்தம் குறித்த தவறான எண்ணங்களை நீக்க வேண்டும்!

இ ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

கொழும்பு, பெப். 15

13ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் நிலவும் தப்பு எண் ணங்களையும் போலி வாதங் களையும் நாடளாவிய ரீதியி லான அறிவூட்டல் செயல்திட் டம் ஒன்றின் ஊடாக அகற்றவேண்டியது அவசியம் - என்று தேசிய சமதான பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் - தற்போதைய நெருக்கடியில் 15

## படகு கவிழ்ந்ததில் மீனவர் உயிரிழப்பு

வடமராட்சி, பெப். 15

கடற்றொழிலுக்கு சென்றபோது படகு கவிழ்ந்ததில் காணாமல் போன மீனவரின் சடலம் கரையொதுங்கியது.

இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் கரிதாஸ் வீதியை சேரந்த பி. ரவிச் சந்திரன் என்பவரின் சட லமே இவ்வாறு கரை ஒதுங்கியது.

இவரும் இன்னொரு வருமாக நேற்று முன்தினம் மாலை 15

## யாழ். மாநகர சபையின் பட்ஜெட் மீண்டும் தோல்வி!

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மீண்டும் புதி தாக சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 8 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக் கான வரவு - செல வுத் திட்டம் முதல் வர் இ. ஆனல்ட்டால் 15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண மாநகர சபை ஆட்சியை எந்தக் கட்சி கைப்பற்றுகின்றதோ அந்தக் கட்சியே தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சி என்ற ஸ்தானத்தைப் பெறும் என்பது எழுதப்படாத விதி.

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மேயர் வேட்பாளராக முன்நிலைப்படுத்தப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட 'ஊடக ஜாம்பவான்' வித்தியாதரன், இப்போது தமிழரசின் மேயர் போட்டியில் இருந்து அநேகமாக ஒதுங்கும் முடிவுக்கு வந்துவிட்டாரென அறியமுடிகின்றது.

முன்னரும் ஒருதடவை இதுகுறித்து இந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அதனை படித்துவிட்டு, ஒரு மூத்த அரசியல் ஆய்வாளர் என்னோடு பேசியபோது, ஒரு விடயத்தை சுட்டிநின்றார்.

'வித்தியண்ணர், தனது பத்திரிகையில் தமிழரசு கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரைப் பற்றி எழுதிய விடயங்களும், அந்தத் தலைவர் அரசியல் ரீதியாக சறுக்கிய பல தடவைகளில் அவரை தூக்கிவிடுவதுபோல எழுதியவர். அவரின் எழுத்துக்கள் அந்தத் தலைவருக்கு பல தடவைகள் உயிர்கொடுத்திருக்கின்றன.

ஆனால், அவர் உண்மையில் வித்தியண்ணையை மேயராக்க விரும்பியிருந்தால், அவரை கடந்த தேர்தலில் மணிவண்ணனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது மேயர் வேட்பாளராக முன்னிலைப்படுத்திக் கொண்டு அவரை தமது பட்டியலிலேயே வேட்பாளராக சேர்த்தது.

உள்ளூராட்சி தேர்தல் என்பது அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்காளர்களால் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் வாக்களித்து பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற தேர்தல். அதனால் தான் தேர்தல் விதிகளிலும் வேட்பாளர்கள் அந்த உள்ளூராட்சி சபை பிரதேசத்தில் கட்டாயமாக வாழ்பவராக இருக்கவேண்டும் என்று தேர்தல் விதிமுறைகள் கூறுகின்றன.

வித்தியாதரன், கடந்த தொண்ணூறுகளில் இருந்து கொழும்பில் வாழ்பவர். அவர் யாழ்ப்பாணத்தில் தனது வாக்காளர் பதிவை வைத்திருந்தாலும் அவர் வாழ்வது கொழும்பில். அவரை தமது பட்டியல் மூலம் வேட்பாளராக்கிவிட்டு, அவரே தமது மேயர் வேட்பாளர் என்று அறிவித்திருக்கவேண்டும். அதைவிட அவர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட மக்கள் மத்தியில் மாத்திரம் அறிமுகமானவர் அல்ல. அவர் தமிழரசு கட்சியின் கொழும்பு கிளையின் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றியவர். அவரை கட்சி போட்டியிடுகின்ற அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் பிர சாரத்தில் அவர் ஈடுபடவைத்திருக்கவேண்டுமே தவிர, ஒரு வட்டாரத்தில் போட்டி வேட்பாளராக்கி அந்த வட்டாரத்தில் பிரசாரம் செய்ய வைத்திருக்கக்கூடாது.' என்றார் அந்த ஆய்வாளரான நண்பர்.

மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் யார் மேயர் பதவிக்கு பொருத்தமானவர் என்பதை மக்கள் அறியக்கூடிய வகையில் ஒருவர் அந்த வேட்பாளர்களில் இருப்பார். ஆனால், நடக்க விருக்கும் தேர்தலில் தமிழரசு சார்பில் தற்போதைய மேயரும் ஒரு வேட்பாளர். அவர் தேர்தல் முடிந்த பின்னர் மேயர் பதவிக்கான 'ரேசில்' இருக்கமாட்டார் என்று அண்மையில் கட்சிக் கூட்டத்தில் சுமந்திரன் அறிவித்திருந்தாரென செய்திகள் வெளிவந்திருந்தன.

அப்படியிருந்தாலும்கூட, வித்தியாதரனே கட்சியின் மேயர் வேட்பாளர் என்று கட்சி பகிரங்கமாக அறிவிக்கும் என்று அவருக்கு சொல்லப்பட்டிருந்த போதிலும் அப்படி இதுவரை நடக்கவில்லை.

கடந்த இரண்டாயிரத்து பதினெட்டில் நடந்த யாழ். மாநகர சபைக்கான தேர்தலில் ஒன்று பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பே மொத்தமுள்ள நாற்பத்தி ஐந்து இடங்களில் பதினாறு இடங்களையே பெறமுடிந்தது.

இப்போது தனித்து நிற்கும் தமிழரசு பத்து இடங்களில் வென்றாலே பெரியவிசயம்தான். அப்படியொரு நிலைமை வந்தாலும் ஏனைய கட்சிகளின் ஆதரவை பெற்று ஐந்து ஆண்டுகளும் வெற்றிகரமாக ஆட்சியைக் கொண்டுபோகக்கூடிய 'வல்லமை' தனக்கு இருக்கின்றது என்கின்ற வித்தியின் கருத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான்.

ஆனால், மேயர் வேட்பாளராக அறிவிப்பதாக கூறி அவரை ஊடகத்துறையில் இருந்தும் ஓய்வுபெற வைத்துவிட்டு அவரை இப்படி ஒரு மாநாகர சபை உறுப்பினர் அளவுக்கு கொண்டு வந்துவிட்டிருக்கின்றது தமிழரசு. இதனை அறிகின்றபோது அந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வருகின்றது.

பதின்மூன்றாம் ஆண்டில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், வித்தியாதரனை மாகாண முதல்வர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மூன்று பிரதான தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சம்பந்தனை சந்தித்திருந்தனர்.

அப்போது வித்திக்கு அந்த நியமனத்தை கொடுக்க முடியாது என்றபோதிலும் வித்தியாதரனுக்கு உரிய நேரத்தில் உரிய கௌரவத்தை கொடுப்போம் என்று சம்பந்தன் அந்த ஆசிரியர்களுக்கு சொல்லி அனுப்பிவைத்தார்.

சம்பந்தனின் அகராதியில் இதுதான் கௌரவம் என்பதோ தெரியவில்லை.

தமிழரசு எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு யாழ். மாநகர சபை ஆட்சியை பிடிக்கப்போவதில்லை என்பது தெரிந்ததுதான். ஆனால், மேயர் வேட்பாளராகவாவது கேட்டு கட்சி ஆட்சியைப் பிடிக்காவிட்டாலும் மேயர் வேட்பாளர் என்ற கௌரவத்துடன் இருந்திருக்கலாம் என்பதற்காகத்தான் வித்தியும் தன்னை மேயர் வேட்பாளர் என்று அறிவிக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ தெரியவில்லை. அவரின் விருப்பத்திலும் நியாயம் இருப்பதாகவே தெரிகின்றது.

- ஊர்க்குருவி

# பணத்தை பெற தேர்தல் குழு திறைசேரியுடன் பேச வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, பெப். 15

தேர்தல் செலவுகளுக்கான பணத்தை பெறுவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு திறைசேரியின் செயலாளருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றாலும் இந்த கலந்துரையாடலை தேர்தல் ஆணைக்குழு தவிர்த்து வருகிறது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தல் மக்களின் அடிப்படை உரிமை. அது நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசிய கட்சி இருக்கிறது. என்றாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைக்கே ஜனாதிபதி முன்னுரிமை வழங்கி செயல்படுகிறார்.

மக்களின் வாக்குரிமை மதிக்கப்படவேண்டும். அதனால் தேர்தலுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராகவே இருக்கிறது. என்றாலும் தற்போதுள்ள பிரச்னை பணம் இல்லாமையாகும். தேர்தல் ஆணைக்குழு 300 கோடி ரூபாயை திறைசேரியிடம் கோரி இருக்கிறது. அதனால் தேர்தல் செலவுகளுக்கு பணத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடுமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாங்கள் பல தடவைகள் தெரிவித்திருக்கிறோம். ஆனால், இதுவரை அந்த கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

தேர்தல் ஆணைக்குழு கோரும் பணத்தை ஒரே தடவையில் வழங்குவதற்கு திறைசேரிக்கு முடியாமல் இருக்கலாம். அதனால் அந்த பணத்தை கட்டம் கட்டமாக வழங்க முடியுமாக இருக்கும் என்றே நான் நினைக்கிறேன். அதனால் தான் இது தொடர்பாக கலந்துரையாடுமாறு தெரிவிக்கிறோம்.

அத்துடன் வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு தேவையான பணம் இல்லாமல் அச்சிட முடியாது என அரசாங்க அச்சகம் தெரிவித்திருக்கிறது. அப்படியானால் தேர்தலை எவ்வாறு நடத்துவது?. என்றாலும் திறைசேரியுடன் கலந்துரையாட தேர்தல் ஆணைக்குழு தவிர்த்து வருகிறது.

ஐக்கிய தேசிய கட்சியை பொறுத்தவரை, வெற்றி, தோல்வி எதுவாக இருந்தாலும் தேர்தலுக்கு முகம் கொடுக்க ஒரு போதும் பின்வாங்கியது இல்லை. என்றாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவேனும் தீர்வு காண ஜனாதிபதிக்கு இன்னும் 6மாதங்களாவது கால அவகாசம் வழங்க வேண்டும். அதன் பின்னர் தேர்தலுக்கு செல்ல முடியும் - என்றார். (ஐ)

# ஜேர்மன் நாட்டின் எம். பி. இலங்கை வந்துள்ளார்!

கொழும்பு, பெப். 15

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் பீற்றர் ரம்ஸோர் உயர்மட்ட சந்திப்புகளில் பங்கேற்பதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை வந்துள்ளார்.

ஜேர்மன் பாராளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அறிக்கையாளராகப் பதவி வகிக்கும் பீற்றர் ரம்ஸோரின் வருகை இலங்கைக்கும் ஜேர்மனுக்கும் இடையிலான இருதரப்புத்தொடர்புகளை வலுப்படுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேவேளை, இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் கடந்த 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையிலேயே அவரின் இந்த வருகை இடம்பெறுகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருக்கும் அவர், இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹொல்கர் சீபேற்றுடன் இணைந்து அரசாங்கத்தின் உயர்மட்டப்பிரதிநிதிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புகளை நிகழ்த்தவுள்ளார்.

# இளம் குடும்பஸ்தர் விபத்தில் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 15

உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் காயமடைந்தவர் உயிரிழந்தார்.

திருமணமாகி இரண்டு மாதங்களான தெல்லிப்பழையை சேர்ந்த பாலசுப்பிரமணியம் சயந்தன் (வயது- 29) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரும் அவ ரின் சகோதரனும் கடந்த ஜனவரி 17ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் கொடிகாமம் சென்று திரும்பியபோது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளான சகோதரர்கள் இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே, ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 11

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை ஒட்டி தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், இளம்சைவப்புலவர் க. கயிலைநாதன் “சந்த பாமாலையால் கந்தன் புகழ் பாடிய அருணகிரிநாதர்” என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ)

# கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு சந்நிதியான் ஆசிரமத்தால் மருந்துகள்!



வடமராட்சி, பெப். 15

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு 7 இலட்சத்து 76 ஆயிரத்து 650 ரூபாய் பெறுமதியான மருந்து வகைகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

தற்போதைய மருத்து பொருட்களின் பற்றாக் குறையை கருத்தில் கொண்டு மருத்துவமனையின் கோரிக் கைக்கு அமைவாக இந்த மருந்துப் பொருட்கள் அந்த மருத்துவமனையின் அத்தியட்சகரிடம் சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகளால் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-02)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
15.02.2023 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# பிரபாகரன்?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் எனவும் அவர் விரைவில் தமிழ்த் தேசிய வேலைத் திட்டத்துடன் வரவுள்ளார் என்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்த் தேசிய பேரியக்கத்தின் தலைவராக தன்னை அடையாளம் காண்பிக்கும் நெடுமாறன் தெரிவித்திருந்தார். பிரபாகரன் உடல் காண்பிக்கப்பட்ட சூழலில், அவரின் மறைவுச் செய்தியை, அப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச பொறுப்பாளராக இருந்த குமரன் பத்மநாதன் (கே. பி) உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால், புலிகள் சார்பான அமைப்புகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் எவையுமே பிரபாகரனின் மறைவுச் செய்தியை அங்கீகரிக்கவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான், நெடுமாறன் பிரபாகரன் தன்னுடன் தொடர்பிலிருக்கிறாரென ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார். இப்போது, 13வருடங்கள் கழித்து திடீரென்று பிரபாகரன் தொடர்பில் பரப்பரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்.

நெடுமாறன் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து வழமைபோல் உளவுத்துறை புனைகதைகளை பலரும் கூறமுற்படுவதை காணமுடிகின்றது. வெறும் ஊகங்களை முன்வைத்து இவ்வாறான விடயங்களை அணுகுவது தவறானது. ஆனால், ஈழ ஆதரவு என்னும் பெயரில் பலர் விடுதலைப் புலிகளின் தியாகத்தை தங்களின் சொந்த நலன்களுக்கு பயன்படுத்தி வருவது இரகசியமானதல்ல. தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும் இதனை சிறப்பாக செய்வதுண்டு இதன் காரணமாகவே பிரபாகரன் தொடர்பில் சர்ச்சைகள் எழுகின்றபோது இவர்கள் அமைதியடைந்து விடுகின்றனர். தமிழ்நாட்டு குழுக்களை கண்டிப்பதில்லை.

2009இல் பிரபாகரன் போரில் வீரமரணத்தை தழுவிக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டபோது, அதனை அப்போது பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது பலரும் தயங்கியதைக்கூட ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஏனெனில், அந்தளவுக்கு மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீதும் அதன் தலைவரான பிரபாகரன்மீதும் பிரமிப்பும் நம்பிக்கையும் இருந்தன. ஆனால், யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களின் பின்னரும் அவர் இருக்கிறாரெனக்கூறும்போது சந்தேகங்கள் ஏற்படுவது இயல்பானது. இதற்கு பின்னால் என்ன இருக்கின்றது? எதற்காக இவ்வாறான கதையொன்று இப்போது புனையப்படுகின்றது? இவ்வாறான கேள்விகள் எழுவது இயல்பானதே - ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம். நெடுமாறன் இப்போதும்கூட இவ்வாறான கதைகளை துணிந்து கூறுவதற்கு என்ன காரணம்? உண்மையில் புலம்பெயர் அமைப்புக்களதும் விடுதலைப் புலிகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிடும் கட்சிகளினதும் துணிவின்மையும் இயலாமையுமே இதற்கான காரணமாகும்.

ஏனெனில், முள்ளிவாய்க்கால் அவலம் இடம்பெற்று பதின்மூன்று வருடங்களாகின்றன. இந்தப் பதின்மூன்று வருடங்களாக புலம்பெயர் நாடுகளில் மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டது. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, தமிழர் தாயகத்திலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், எங்குமே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக இருந்த பிரபாகரன் தொடர்பில் எவருமே வாய்திறக்கவில்லை. களத்தில் அதனைப் பேச முடியாது. ஆனால், புலத்தில் ஏன் பேசமுடியவில்லை? ஒருவேளை பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தால் இப்போது நெடுமாறனால் இவ்வாறு கூற முடியாது போயிருக்கும். எனவே, பிழைகளை ஈழத் தமிழ்த் தேசிய செயல்பாடுகளிலிருந்துதான் நோக்க வேண்டுமேயன்றி - மாறாக மற்றவர்கள்மீது குற்றம்சாட்டுவதில் பயனில்லை.

அவர் இறக்கவில்லை என்பதால்தானே அவருக்கு எவருமே அஞ்சலி செலுத்தவில்லை. அவ்வாறாயின், இப்போது நெடுமாறன் கூறுவதற்கு பின்னால் ஏதேனும் பின்னணி இருக்குமென்றால், கடந்த பதின்மூன்று வருடங்களாக பிரபாகரன் தொடர்பில் ஆழ்ந்த அமைதி காண்பிக்கும் புலம்பெயர் அமைப்புக்களின் செயல்பாடுகளின் பின்னணி என்ன? எனவே, ஈழத் தமிழ் அரசியல் அவ்வப்போது குழப்பப்படுகின்றது என்றால், அதற்கான காரணங்களை எங்கள் மத்தியிலிருந்துதான் தேட வேண்டுமேயன்றி மற்றவர்களிடமிருந்தல்ல. ஆனால், எங்கள் மத்தியில் ஓர் அரசியல் நோயுண்டு. அதாவது, ஏதாவது, நடந்தால் அதற்கான பழியை ஒன்றில் இலங்கையின்மீது அல்லது ஏதாவது நாட்டின் உளவுத்துறைகள்மீது சுமத்திவிட்டு எங்கள் பொறுப்பிலிருந்து தப்பியோடிவிடுவது. எங்கள் பிரச்னைகளுக்கான காரணங்களை எங்களுக்குள் தேடினால் மட்டும்தான் இந்த நோயைப் போக்க முடியும்.

# தேர்தலுக்கு அரசு தடை நீதிமன்றை நாடுவோம்!

## இலங்கை கம்யூனிச கட்சி

கொழும்பு, பெப் 15

தேர்தல் பணிகளை முன்னெடுக்குமாறு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரசாங்கம் செயல்படுவது வெறுக்கத்தக்கது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் அழிவு ஆரம்பமாகும் என இலங்கை கம்யூனிச கட்சியின் பதில் தலைவர் வீரசுமண வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு - நாவல பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் நோக்கம் தமக்கு கிடையாது, தேர்தலை நடத்தவே முயற்சிக்கிறோம் என அரசாங்கம் ஒருபுறம் குறிப்பிட்டுக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுகிறது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒதுக்குவதை அரசாங்கம் தாமதப்படுத்துகிறது. இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்ற பிரச்சினை ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் உண்டு.

யானை மற்றும் மொட்டுக் கூட்டணி ஸ்தாபிக்கப்படாத நிலையில் தேர்தலை எதிர்கொள்ள இவ்விரு தரப்பினரும் தயாரில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் தயார் இல்லை என்றால். தேர்தல் போட்டியில் இருந்து அவர்கள் தாராளமாக விலகிக் கொள்ளலாம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் உரிமை ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் கிடையாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உயர்நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தியுள்ள நிலையில் தேர்தலை பிற்போட அரசாங்கம் தேர்தல் செயல்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்க உயர்நீதிமன்றத்தை நாடுவதை தவிர மாற்று வழியேதும் தற்போது கிடையாது - என்றார். (ஐ)

# இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்துக்கு அனுமதி!

கொழும்பு, பெப். 15

இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இது தொடர்பான வர்த்தமானியை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தை தயாரிப்பதற்காக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# ஷாப்டரின் உடல் பாகங்களை பாதுகாப்பாக வைக்க உத்தரவு


கொழும்பு, பெப். 15

மர்மமான முறையில் மரணமடைந்த தினேஷ் ஷாப்டரின் உடல் பாகங்களை விசாரணை நோக்கங்களுக்காக பாதுகாப்பாக காவலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. உயிரிழந்த தினேஷ் ஷாப்டரின் குடும் பத்தின் உரிமைகளுக்காக வாதிட்ட ஜனாதிபதி சட் டத் தரணி அனுஜ பிரே மரத்ன விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 15 புதன்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : தசமி




**மேடம்**
உங்கள் முயற்சியில் இன்று தடை உண்டாகும். செயல்களில் நிதானம் தேவை. பணியில் கூடுதல் கவனம் செலுத்துவதால் நெருக்கடி விலகும். எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

**இடபம்**
ஒரு முயற்சியை ஒத்திவைப்பீர்கள். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர். நண்பர்கள் ஆதரவால் உங்கள் முயற்சி லாபமாகும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்தம் மறையும்.

**மிதுனம்**
வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். விரைந்து செயல்பட்டு ஒரு செயலை முடிப்பீர்கள். ஷளதிர்ப்பு விலகும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு உண்டாகும்.

**கடகம்**
உறவினரால் நன்மை காண்பீர்கள். நீங்கள் நினைத்தது நிறை வேறும். திட்டமிட்டு செயல்பட்டு பிரச்னைகளை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் நீங்கள் மேற் கொள்ளும் முயற்சி தள்ளிப்போகும்.

**சிம்மம்**
குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உத்தியோகத்தில் சக பணியாளர்களும் மறைமுகமாக தொல்லை அளிப்பர். விழிப்புணர்வு தேவை.

**கன்னி**
சகோதரர்களால் உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். நேற்றைய பிரச்னை முடிவுறும். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கடன்களால் ஏற்பட்ட சங்கடம் நீங்கும்.

**துலாம்**
குடும்பத்தில் இளம் தம்பதியர் ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவீர்கள். வேலைக்குரிய முயற்சியில் முன் னேற்றம் காண்பீர்கள். உறவினர் ஒருவரின் சுய ரூபத்தை தெரிந்துகொள்வீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் நினைப்பிற்கு மாறாக செயல்கள் நடைபெறும். அமைதியாக இருக்க வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் பொறுப்பு அதிகரிக்கும். ஒரு சிலருக்கு பணியாளர்களுடன் பிரச்னைகள் ஏற்படும்.

**தனுசு**
வரவை விட செலவு அதிகரிக்கும் என்பதால் கவனமுடன் செயல்படுவீர்கள். சக பணியாளர்களுடன் அனுசரித்துச் செல்வதின் மூலம் உங்கள் முயற்சி வெற்றி பெறும். எதிர்பாராத சங்கடம் ஏற்படும்.

**மகரம்**
புதிய நட்பின் வழியே உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த வருவாய் வரும். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் உண்டாகும் நாள். உங்கள் முயற்சி தொழிலில் லாபத்தை ஏற்படுத்தும்.

**மீனம்**
நேற்றுவரை இருந்த நெருக்கடி விலகும். பழைய பிரச்னைகளுக்கு முடிவு காண்பீர்கள். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# தமிழகத்தில் மக்கள் நடமாடவே அச்சம்!

## எடப்பாடி பழனிசாமி

சென்னை. பெப். 15

“தமிழகத்தில் நிகழும் கொலை, கொள்ளை சம்பவங்களைப் பார்க்கும்போது, சட்டம் - ஒழுங்கு என்பதே இல்லையோ என்ற கேள்வி எழுவதுடன், நிர்வாகத் திறனற்ற இந்த ஆட்சியில், பொதுமக்கள் வெளியில் நடமாடவே அச்சப் படுகிறார் கள்”, என்று அ. தி. மு. க. இடைக்காலப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், “கோவையில் வீடுபுகுந்து துப்பாக்கியால் சுட்டும், அரிவாளால் வெட்டியும் படுகொலை, அதே கோவையில் நீதிமன்ற வளாகத்தில் ஆயிரக்கணக்கானோர் கண்முன்னே மேலும் ஒருவர் கொலை.

திருவண்ணாமலையில் 4 ஏ. ரி. எம்களில் தொடர் கொள்ளை, சென்னையில் நகைக்கடையில் கொள்ளை போன்ற சம்பவங்களை பார்க்கும்போது, தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு என்பதே இல்லையோ என்ற கேள்வி எழுவதுடன், நிர்வாகத் திறனற்ற இந்த ஆட்சியில், பொதுமக்கள் வெளியில் நடமாவே அச்சப்படுகிறார்கள் - என்றார்.

# சேது சமுத்திர திட்டத்தை செயல்படுத்த வேண்டும்!

## கி. வீரமணி வலியுறுத்து

சென்னை, பெப். 15

சேது சமுத்திர திட்டத்தை மீண்டும் கையில் எடுக்கவேண்டும். அதனை செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி. வீரமணி.

கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல, சேது சமுத்திர திட்டம் என்ற மிகப்பெரிய திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டம் முடிவுற்று இருந்தால் தமிழக இளைஞர்கள் உள்பட ஏராளமான இந்திய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து, தென்கிழக்கு ஆசியாவிலேயே பொருளாதாரம் செழிக்கும் திட்டமாக உருவாகி இருக்கும். இராமர் பாலம் என்ற காரணத்தை சொல்லி இத்திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். இப்போது அது இல்லை என்று அவர்களே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

எனவே, சேது சமுத்திர திட்டத்தை மீண்டும் கையில் எடுக்கவேண்டும். அதனை செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

உண்மைகள் எவ்வளவு கசப்பாக இருந்தாலும், அதனை மக்களிடம் எடுத்து சொல்லி வருகிறோம். இது சமூகநீதி பயணமாகும். நாம் தான் இந்தியாவுக்கே சமூகநீதியை சொல்லிக் கொடுத்து வருகிறோம். அது, தமிழ்நாடு என்ற பெரியார் மண் தான். இன்றைக்கு அம்பேத்கருக்கு பலரும் உரிமை கொண்டாடுகிறார்கள். அது தவறு. ஏற்றுக் கொள்ளவும் முடியாது - என்றார். (ஐ)

# தமிழகத்தில் மக்கள் உயிருக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையுள்ளது

## தமிழக பா. ஜ. க. சாடல்

சென்னை, பெப். 15

ஒட்டுமொத்த அமைச்சார்களையும் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பணியில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம் தமிழக மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாது காப்பற்ற சூழ்நிலையை தி. மு. க. அரசு ஏற்படுத்தியுள்ள தாக பா. ஜ. க. மாநிலத் தலை வர் கே. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட ருவிற்றர் பதிவில், கோவையில் பொதுமக்கள் முன்னிலையிலும், நீதிமன்ற வளாகத்திலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் இரு கொலை சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாது, துப்பாக்கி கலாசாரமும் தலையெடுத்துள்ளது.

தி. மு. க ஆட்சிக்கு வந்ததிலிருந்தே சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து கொண்டிருக்கிறது. காவல் துறையின் கைகள் கட் டப்பட்டிருக்கின்றன. காவலர்களுக்கே பாதுகாப்பற்ற சூழ் நிலை நிலவுகிறது.

ஒட்டுமொத்த அமைச்சர்களையும் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பணிக்கு அனுப்பிவிட்டு, பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப் பற்ற சூழ்நிலையை உண்டாக்கி ருக்கிறது தமிழக அரசு. முதல்வர், சட்டம் - ஒழுங்கில் கவனம் செலுத்தி, பொது மக்கள் அச்சமின்றி வாழ கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பதிவிட்டுள்ளார் கே. அண்ணாமலை. (ஐ)

# மோடியின் தமிழ் பற்றாலேயே மூன்று தமிழருக்கு ஆளுநர் பதவி!

## ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

சென்னை, பெப். 15

இந்திய பிரதமர் மோடியின் தமிழ் பற்றே மூன்று தமிழர்களுக்கு ஆளுநர் பதவி வழங்கக் காரணம் என்று அண்மையில் ஜார்கண்ட் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட ஆளுநராக சி. பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவரை நேற்று செய்தியாளர்கள் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஆளுநர் பதவி எனக்கு கிடைத்ததை மகத்தான மரியாதையாகவும், தமிழினத்துக்கு கிடைத்த பெருமையாகவும் பார்க்கிறேன். நாம் நினைக்கும் திசையில் நமது அரசியல் பயணம் செல்வது இல்லை. யாருக்கு எந்த பொறுப்பு, எப்போது கிடைக்கும் என்பதை நாம் அறிய முடியாது.

ஆளுநர் பொறுப்போ அல்லது எந்த பொறுப்பாக இருந்தாலும் கிடைத்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். எனது அரசியல் பயணம் அந்த வகையில்தான் இருந்திருக்கிறது. ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோர் தமிழ் மீதும், தமிழ் கலாசாரம், இலக்கியம், பண்பாட்டின்மீது மிகுந்த பற்றும், பெருமையும் வைத்துள்ளனர்.

தமிழகத்தின் மீது அவர்கள் வைத்துள்ள பற்றாலேயே, தமிழகத்தை சேர்ந்த 3 பேருக்கு (இல.கணேசன், தமிழிசை சௌந்தரராஜன், சி.பி. ராதாகிருஷ்ணன்) ஆளுநர் பதவி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# மின் கட்டண அதிகரிப்பு இணக்கப்பாடு இல்லை!

## நேற்றைய கலந்துரையாடல் பிசுபிசுப்பு

கொழும்பு, பெப். 15

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபைக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் இணக்கப்பாட்டின்றி முடிவடைந்ததாக அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தேசிய சபைக்கு அறிவித்துள்ளனர்.

மின்சார கட்டணம் தொடர்பில் கலந்துரையாடி தெளிவான தீர்மானத்திற்கு வருமாறு தேசிய சபை நேற்று முன் தினம் மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தது.

இதன் பிரகாரம் இரு தரப்பினருக்கும் இடையில் மின்சார கட்டணம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மின்சார கட்டணம் தொடர்பான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இன்று வழங்கப்படுமென நம்புவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான டி.வி. சானக, இந்திக அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் சாகர காரியவசம், பணிமனை பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் திருமதி குஷானி ரோஹணதீர ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (அ)



# யாழ். மாநகர சபையில் றெமீடியஸுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 15

விபத்தில் உயிரிழந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் மூத்த சட்டத்தரணி மு.றெமீடியஸுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மாநகர சபை கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

மேலும் மறைந்த மு.றெமீடியஸுக்கு யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தினர்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ் கடந்த 7ஆம் திகதி சிறுப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளானார்.

படுகாயத்தோடு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)

# யாசகம் பெற சிறுவரை பயன்படுத்தினால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கவும்!

கொழும்பு, பெப். 15

யாசகம் கேட்பதற்காக சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சிறுவர் யாசகம் பெறும் சம்பவங்கள் வழமையாக பதிவாகி வருவதாகத் தெரிவித்த அவர், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் யாசகம் எடுப்பதற்கு அதிக வாய்ப்புள்ளதாகவும் கூறினார். (அ)

# இரண்டாக உடைகின்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, பெப். 15

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015 பாராளுமன்றத் தேர்தலில் 95 ஆசனங்களைப் பெற்றிருந்த சுதந்திரக் கட்சி, 2020 பாராளுமன்றத் தேர்தலில் 14 ஆசனங்களை மாத்திரமே பெற்றன.

அவர்களுள் 9 பேர் ரணில் ஜனாதிபதியானதும் ரணிலின் அரசில் இணைந்துகொண்டனர். 5 எம்.பிக்களே எஞ்சியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின்போது கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அந்த 5 எம்.பிக்கள் இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்க ட்சித் தகவல்கள் கூறுகின்றன.

மூன்று எம்.பிக்கள் ஒரு பக்கமும், இரண்டு எம்.பிக்கள் இன்னொரு பக்கமும் செல்வதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லப்படுகின்றது. (அ)

# ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு ஒரு நாளில் ஹெரோயின் விற்பனை!

## மொரட்டுவை பகுதியில் மாத்திரம்

கொழும்பு, பெப். 15

மொரட்டுவை பகுதியில் மாத்திரம் நாளொன்றுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாக மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஹெரோயின் அல்லது ஐஸ் போன்ற போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ள ஒருவர் நாளொன்றுக்கு போதைப் பொருளுக்காக சுமார் 3,200 ரூபா வரை செலவு செய்கின்றார்.

நாளாந்தம் காலை வேளையில் எவ்வாறு அந்த பணத்தை ஈட்ட முடியும் என்றே அவர்கள் எண்ணுகின்றனர்.

அவ்வாறானவர்கள் இருக்கும் வரையில் விநியோகிப்பவர்கள் தொடர்ந்தும் விநியோகித்துக் கொண்டே இருப்பார்கள்.

பாடசாலை மாணவர்களும் இதற்காக இலக்கு வைக்கப்படுகின்றனர்.

இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ)

# சத்திர சிகிச்சைகள் ஒத்திவைப்பு அர்ப்பணிப்பு உள்ள தீர்மானமே!

கொழும்பு, பெப். 15

அத்தியாவசியமற்ற சத்திர சிகிச்சைகளை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் நிதிப் பற்றாக்குறையினால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பாகும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அத்தியாவசியமற்ற சத்திர சிகிச்சைகளை ஒத்திவைப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் அதற்குரிய அமைச்சரின் தனிப்பட்ட தீர்மானம் அல்ல.

ஔடதங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய நிதியில்லாமையினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது போன்ற சந்தர்ப்பங்களில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை தவிர வேறு வழியில்லை - என்றார். (அ)

# அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, பெப். 15

மஹியங்கனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹியங்கனை பதிய தலாவ வீதியில் தெயஹிகொல்ல பாடசாலைக்கு அருகாமையில் மூடப்பட்டுள்ள கடை ஒன்றுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பலகை தட்டுக்கு அடியில் ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இறந்தமைக்கான காரணம் இது வரையில் கண்டறியப்படவில்லை எனவும் குறித்த நபர் யார் என்ற அடையாளம் காணப்படவில்லை எனவும் மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது மஹியங்கனை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# நெல்லுக்கு நிர்ணய விலை!

கொழும்பு, பெப். 15

பெரும்போக நெல் கொள்வனவிற்கான நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை நிதி அமைச்சினூடாக வெளியிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசேகர தெரிவித்தார்.

அதற்கமைய, உலர்த்தப்படாத நெல் ஒரு கிலோ கிராம் 88 ரூபாவிற்கும் உலர்த்தப்பட்ட நெல் ஒரு கிலோ கிராம் 100 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் மத்திய ஆலை உரிமையாளர்களூடாக நெல்லை கொள்வனவு செய்யுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் கூறினார். (அ)

# தபால் மூல வாக்குச்சீட்டுகளை திட்டமிட்டபடி வழங்கமுடியாது

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, பெப். 15

தபால்மூல வாக்குப்பதிவுக்கான வாக்குச்சீட்டுகளை முன்னதாக திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை வழங்க முடியாது என அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உரிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும் வரை தபால் மூல வாக்குச் சீட்டுகளை அச்சடிக்க அரச அச்சகங்கள் மறுத்துள்ளதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார். (அ)

# காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான கடற்பாதையை பிரதேச சபையிடம் தாருங்கள்!

## கோருகின்றார் காரைநகர் தவிசாளர்

யாழ்ப்பாணம், பெப். 15

காரைநகர்-ஊர்காவற்துறை இடையிலான கடற்பாதை சேவை மட்டுப்படுத்தப்பட்ட தால் அப்பாதையை பயன்படுத் தும் பல தரப்பினரும் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்ற னர். அந்த பாதையை காரை நகர் பிரதேச சபை ஆகிய எங்க ளிடம் தந்தால் அதனை திறம் படச் செய்வோம் என காரை நகர் பிரதேச சபையின் தவிசா ளர் பாலச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

பிரதேச சபையில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

காரைநகரில் இருந்து ஊர் காவற்துறைக்கு பயணிக்கும் உத்தியோகத்தர்களாக இருந்தா லும் சரி பொதுமக்களாக இருந் தாலும் சரி தற்போது பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயக்கப்படுகின்ற குறித்த கடற்பாதை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தால் இயங்காத நிலை யில் காணப்பட்டது. அதற் கான மண்ணெண்ணெயை நாங்கள் பெற்றுக் கொடுத்து பாதையை இயங்கச் செய்தோம்.



தற்போது மண்ணெண் ணெய் செலவுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத் தால் பாதைச் சேவையின் நேரங் களில் மாற்றம் செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவி லான சேவை நடைபெறுகிறது.

இதனால் காரைநகரில் இருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்துறையில் உள்ள நீதிமன்றம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை மற் றும் பிரதேச செயலகம் ஆகிய வற்றுக்கு கடமைக்குச் செல் லும் ஊழியர்கள், பொதுமக்கள் தனியார் படகுக்கு ஒரு வழிப் பயணத்துக்கு நூறு ரூபா கொடுத்து தமது வாகனங்க ளுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்கின்றனர்.

இவ்வாறு அவர்கள் ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கு கடமைக்கு செல்வார்களானால் அவர்களது சம்பளத்தில் இருந்து இரு வழி பயணத்திற்கு 200 ரூபா செலவிடப்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவர்கள் சம் பள உயர்வும் இல்லாமல் அவஸ் தைப்படும் நிலையில் அவர்கள் தமது குடும்பச் சுமையை எவ் வாறு சுமப்பார்கள் என சிந்தித்து பார்க்கவேண்டும்.

இந்த பாதையை இயக்குவ தற்கு நாங்கள் 04.10.2022 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் 58ஆவது இலக்க தீர்மானம் மூலம் எமது சபை யிடம் அந்தப் பாதையை ஒப்ப டைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு இது வரை எந்தவிதமான பதிலும் வழங்கவில்லை.

இந்த பாதையை எம்மிடம் வழங்கினால் சிறப்பான சேவையை எம்மால் வழங்க முடியும். அதுமட்டுமின்றி நிதிப் பிரச்னை ஏற்படும்போது புலம்பெயர் தேசங்களில் வாழ் கின்ற உறவுகளிடமும் எமது பகுதிகளில் வாழ்கின்ற செல்வந்தர்களிடமும் நிதியை பெற்று சிறப்புடன் சேவையை வழங்க முடியும் - என்றார்.

(அ)



தெல்லிப்பழை வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சை பிரிவுக்கு சத்துமா வகைகள் சிவபூமி அறக்கட்டளையினால் நேற்று வழங்கப் பட்டன. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் இவற்றை வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கினார். (அ)

# நாய்களை பிடியுங்கள்!

## ஈ.பி.டி.பி உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 15

யாழில் தெருநாய்கள், கட் டாக்காலி மாடுகளை மாநகர சபை கட்டுப்படுத்த நடவ டிக்கை எடுக்கவேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் யாழ் மாநகர சபை உறுப் பினர் து.இளங்கோ மாநகர சபை அமர்வில் கோரிக்கை விடுத்தார்.

நேற்று யாழ்ப்பாண மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக் கான பாதீடு சபையில் சமர்ப் பிப்பதற்கான விசேட அமர்வு முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஈபிடிபி உறுப்பினர் இளங்கோ மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்

வீதிகளில் திரிகின்ற நாய்க ளை யாழ் மாநகர சபை கட்டுப் படுத்தவேண்டும். அத்தோடு மாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டும்.இந்த விடயத்தில் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் - என்றார் அவர்.

# மன்னாரில் பெண்கள் கவனவீர்ப்புப் பேரணி!



மன்னார், பெப். 14

நூறு கோடி மக்களின் எழுச்சி - 2023 பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற வாழ்வை கொண்டாடுவோம் எனும் கருப்பொருளில் மன் னார் மாவட்ட மாதர் அபிவி ருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்னர் மாவட்ட செயலகத் திற்கு முன்பாக இடம்பெற்றது. மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்பு ணர்வு நிகழ்வில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நூ றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டதோடு, மனித உரிமை செயற்பாட்டாளர்க ளும் கலந்துகொண்டனர்.

மன்னார் பிரதான நகர சுற்று வட்டத்தின் ஊடாக ஊர்வ லமாக சென்ற பெண்களால் பறை இசை ஒலிக்கப்பட்டு பெண்கள் அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பாடல்கள் இசைக்கப்பட்டன.

மேலும் பெண்களுக்கு எதி ரான பாலியல் வன்கொடுமை கள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை நிறுத்தி உடல் உள ரீதியாக பெண்களை பாதுகாக்கவேண்டும். பெண்க ளின் வாழ்க்கை முன்னேற்றத் திற்காக ஒன்றிணைவோம், வன் முறைகளில் இருந்து விடுதலை பெற சமூகங்களுக்காக ஒன்றி ணைவோம், முதலாளித்து வத்தின் நுகர்வுப் பண்பாட் டிலிருந்து விடுதலை பெறு வோம் என எழுச்சி கொள் வோம், பூமிக்கு எதிரான வன் முறைகளை முடிவுக்குக் கொண்டு வர எழுச்சி கொள் வோம் போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

அத்துடன் துண்டுப் பிர சுரங்களும் விநியோகிக்கப்பட் டன. மன்னார் மாதர் அபிவி ருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னாரில் உள்ள பெண்கள் நலன் சார்ந்த அமைப்பின் தலை விகளும் நூற்றுக்கும் மேற் பட்ட பெண்களும் கலந்து கொண்டனர். (அ)

### விஞ்ஞான ஆய்வின்படி

# வடக்கில் கடல் அட்டை பண்ணை அமைப்பதால் பாதிப்பே அதிகம்!

யாழ்ப்பாணம், பெப். 15

விஞ்ஞான ஆய்வின் படி வடபகுதியில் கடல் அட்டை பண்ணைகள் அமைப்பது இயற்கை வளத்தைப் பாதிக்கும் என தேசிய மீனவர் இயக்கத் தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கடலட்டைப் பண்ணையி னால் பாதிக்கப்படும் வட மாகாண மீனவர் பிரதிநிதி களை உள்ளடக்கி ஒரு கலந்து ரையாடல் நடத்தப்பட்டது.

அந்த கலந்துரையாடலில் கடலட்டைப் பண்ணை மீன வர்களுக்கு சாதகமானதா பாத கமாக இருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்ந்தோம்.

ஒட்டுமொத்த விஞ்ஞான பூர்வமான கருத்தின்படி இலங்கை கடற்பரப்புக்குள் குறிப்பாக வடபகுதியில் அட் டைப்பண்ணை உருவாக்குவது ஒரு முறையற்ற விடயம். அது மீனவர்களுடைய எதிர்கால வாழ்வை பாதிக்கின்ற ஒரு விட யம்.

வடபகுதியில் மேற்கொள் ளப்படுகின்ற அட்டைப் பண் ணைகள், பாரம்பரிய மீன்பிடி முறைக்கு எதிரானதாகவும், இயற்கை வளங்களை அளிக் கின்றதாகவும் மீன்கள் புலம் பெயரும் இடங்களை தடுக்கின்ற - மீன்கள் முட்டை யிடும் குஞ்சு பொரிக்கும் இடங்களை பாதிக்கின்றதாகக் காணப்படுகிறது

இலங்கையில் வடபகுதியில் 17 விதமான அட்டைகள் காணப்படுகின்றன. அந்த அட் டைகள் அழிக்கப்படுவதற்கு இந்த அட்டை பண்ணைகள் ஒரு காரணமாக இருக்கும்.

ஆகவே இது தொடர்பாக அமைச்சரும் ஏனைய நிறுவனங் கள், கடற்தொழில் பரிசோதர் கள் ஆழமாக ஆய்வு செய்து உடனடியாக இந்த அட்டைப் பண்ணைகளை நிறுத்துவதற் கான நடவடிக்கை எடுக்கவேண் டும்

முக்கியமாக சீனாவின் அட் டைக் குஞ்சுகளை கொண்டு வந்து தான் இந்த அட்டைப் பண்ணைகளில் வளர்க்கிறார் கள். இது கலப்பு முறையான ஒரு செயற்பாடாக காணப்படு கின்றது. இந்த விடயம் சாதார ணமாக வடபகுதியில் இருக் கின்ற இயற்கையாக உருவா கின்ற அட்டைகளின் அழிவுக்கு இது காரணமாக இருக்கின்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்ற அமைப்பின் கருத்துப்படி ஒரு ஆழமான ஆய்வை செய்து இந்த அட் டைப் பண்ணைகளை தடுப்ப தற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# கடவுச்சீட்டு சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, பெப். 15

நேற்று செவ்வாய்க்கிழமை கடவுச்சீட்டைப் பெறுவதற்கு நியமனங்களை முன்பதிவு செய்தவர்கள் இன்று புதன் கிழமை திணைக்களத்திற்கு சமூகமளிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் களம் தெரிவித்துள்ளது.

இன்று புதன்கிழமை நியம னங்களை முன்பதிவு செய்தவர் கள் நாளை வியாழக்கிழமை திணைக்களத்துக்கு சமூக மளிக்குமாறும் குடிவரவு மற் றும் குடியகல்வு திணைக்களம் அறிக்கை ஒன்றின் மூலம் அறி வித்துள்ளது.

கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடவுச்சீட்டு வழங்குவதில் இடையூறு ஏற்பட்டதாக குடி வரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அலுவலகங்களி லும் கடவுச்சீட்டு வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருந்தது.

இதன் காரணமாக நேற்று முன் தினம் கடவுச்சீட்டு பெறா தவர்களுக்கு நேற்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் கடவுச் சீட்டு வழங்கப்படும் என அறி விக்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமை கடவுச்சீட் டைப் பெற்றுக்கொள்ள முன் பதிவு செய்துள்ளவர்களுக்காக எதிர்வரும் சனிக்கிழமை கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களம் குறிப்பிட் டுள்ளது. (அ)

# அபிவிருத்திக்கு தேவையான உதவிகளை வழங்கத் தயார்!

## நியூசிலாந்து தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான சகல உதவிகளையும் வழங்க தயாராக உள்ளதாக இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் எக்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை சீரான நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை!

கொழும்பு, பெப். 15

இலங்கையில் ஒருமுறை பயன்படுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 7 வகையான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை தடை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கரண்டிகள், முட்கரண்டிகள், கத்திகள், தயிர் கரண்டிகள், பிளாஸ்ரிக் இடியப்ப தட்டுகள், பிளாஸ்ரிக் மாலைகள் மற்றும் பிளாஸ்ரிக் கோப்பைகள் தடை செய்யப்படவுள்ளன.

# லண்டனில் சந்திரிகாவுக்கு எதிர்ப்பு

லண்டன், பெப். 15

லண்டன் ஸ்கூல் ஒப் எகனாமிக்ஸின் தெற்காசிய மையம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விருந்தினராக அழைக்கப்பட்டுள்ள மைக்கு தமிழ் மாணவர் அமைப்புகள் பல எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இலங்கையின் 75வது ஆண்டு சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் இந்த நிகழ்வானது, "சிலோன் டு சிறிலங்கா: தேசத்தில் ஒரு பயணம்" என்ற தலைப்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த அழைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் இளையோர் அமைப்பு பல்வேறு மாணவர் அமைப்புகளின் கையெழுத்தோடு கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

1995 கடற்படைத் தேவாலய குண்டுவெடிப்பு, 1995 நாகர்கோவில் பள்ளி படுகொலை, 1996 குமாரபுரம் படுகொலை, 1998 தம்பலகாமம் படுகொலைகள் மற்றும் 1999 புதுக்குடியிருப்பு படுகொலை உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான பல அட்டூழியங்களை மேற்கோள் காட்டியுள்ள மாணவர் அமைப்புகள்

இலங்கையின் நெருக்கடி பற்றி பேசுவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவை அழைத்திருப்பதை கடுமையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளது. (அ)

# உள்ளூர் மிளகாய் உற்பத்தியை 25 வீதம் அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 15

இந்த வருடத்தில் உள்ளூர் மிளகாய் உற்பத்தியை 25 வீதத்தால் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பதுளை மாவட்டத்தில் மிளகாய் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் அமைச்சர் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது அமைச்சர் கடந்த சனிக்கிழமை கும்பல்வெல பிரதேசத்தில் மிளகாய் தோட்டங்களை பார்வையிட்டார்.

உமா ஓயா திட்டத்தின் நிர்மாணப் பணிகள் காரணமாக ஏற்பட்ட நீர்க்கசிவால் பண்டாரவளை மற்றும் கும்பல்வெல பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நெல் மற்றும் காய்கறி விவசாயிகள் இந்நிலையால் ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பயிர்ச் செய்கை நஷ்டமடைந்த விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட மிளகாய்ச் செய்கை திட்டம் இது வரை வெற்றியடைந்துள்ளது.

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டமானது, வெளிநாட்டு நிதியில் விவசாய அமைச்சினால் செயற்படுத்தப்படும் திட்டமாகும், இது விவசாயிகளுக்கு விதைகள், நீர்பாசன தொழில்நுட்பம், நவீன தொழில்நுட்ப உபகரணங்கள், பயிர்களை பூச்சியிலிருந்து பாதுகாக்கும் அறிவு மற்றும் பயிர்ச்செய்கைக்கு தேவையான பிற உபகரணங்களை இலவசமாக வழங்குகிறது.

ஒரு ஏக்கர் நிலத்தில் அரை ஏக்கர் மிளகாய் செடிகளை நட்டு விளைச்சலை அதிகரிப்பது குறித்தும், குறைந்தபட்ச பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களைப் பயன்படுத்தி மிளகாயின் தரத்தை மேம்படுத்துவது குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மிளகாய்ச் செய்கையில் ஆர்வமுள்ள தெரிவு செய்யப்பட்ட இளைஞர் குழுக்களுக்கு மிளகாய் செய்கைக்குத் தேவையான நிதியுதவி, தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை வழங்குமாறு அமைச்சர் அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டிற்கு வருடாந்தம் தேவைப்படும் மொத்த உலர் மிளகாய் 55,000 மெட்ரிக் தொன் என்றாலும், 50,000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்படுகிறது. நாட்டில் வருடாந்தம் சுமார் 5,000 மெற்றிக் தொன் மிளகாய் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாடு அனுப்புவதாக கூறி இளைஞர்களிடம் நிதி மோசடி!

## மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 15

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பதுளை, மடூல்சீமை , பசறை , லுணுகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்டதாக பதுளை, பசறை, லுணுகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பதுளை பொலிஸாரினால் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபரான லுணுகலை பகுதியை சேர்ந்த பாடசாலை ஒன்றின் அதிபர் நேற்றிரவு லுணுகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குறித்த அதிபரையும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்தோடு மேலும் ஒரு சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் அவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# 17,000 மில்லியன் ரூபா கடனை உடனடியாக செலுத்துமாறு உர நிறுவனங்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 15

அரசாங்கம் செலுத்த வேண்டிய 17000 மில்லியன் ரூபா கடன் தொகையை உடனடியாக செலுத்துமாறு உர நிறுவனங்கள் விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதன்படி இரசாயன உரங்களை வழங்குவதற்காக 11,000 மில்லியன் ரூபாவும், சேதன உரங்களை வழங்குவதற்காக 6000 மில்லியன் ரூபாவும் அந்தந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித் துள்ளது.

கடந்த வருடம் 4,000 மில்லியன் ரூபா நிலுவைத் தொகை செலுத்தப்பட்டபோதிலும், மேலும் 17,000 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாக அந்தந்த உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் உர நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளனர்.

அரசாங்கம் நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் முறைக்கேற்ப உரிய நிலுவைத்தொகை செலுத்தப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த பருவத்தில் நாடு முழுவதும் உரம் விநியோகிக்க அரசாங்கம் 6 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# போகம்பரை சிறைச்சாலை சுற்றுலாத் தலமாகின்றது!

கொழும்பு, பெப். 15

உலக பாரம்பரியமிக்க கண்டி நகரின் முக்கிய வரலாற்று கட்டடமாக கருதப்படும் போகம்பரை சிறைச்சாலையை கண்டி நகரின் கலாசார ஈர்ப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 18ஆம் திகதி போகம்பரை சிறைச்சாலை வளாகத்திற்குச் சென்று, சிறைச்சாலை கட்டிடத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துவார் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

போகம்பரை சிறைச்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட போதே இராஜாங்க அமைச்சர் இதனை அறிவித்துள்ளார்.

சிறைச்சாலையை நவீனமயமாக்கி, சுற்றுலா தளமாக மாற்றும் வகையில், தொன்மையைப் பாதுகாத்து, விடுதி வளாகம் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

போகம்பரை சிறைச்சாலை 1876 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் ஆணையாளர் என்.ஆர். சௌண்டர்ஸ் என்பவரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது ஆசியாவிலேயே மிக நீளமான கட்டடம் ஆகும், அது பிரிக்கப்பட்ட பிரிவுகள் இல்லாமல் ஒரே தளத்தில் கட்டப்பட்டுள்ளது. (அ)

# 111 வருடங்களின் பின்னர் மதுவரி சட்டம் புதுப்பிப்பு!

கொழும்பு, பெப். 15

1912 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டம், 111 வருடங்களின் பின்னர் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

அதன்படி, மதுசாரம் மற்றும் புகையிலைப் பாவனை, அதனுடன் தொடர்புடைய வர்த்தகங்களை ஒழுங்குபடுத்தல், குறித்த உரிமப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் வரி விதிப்பனவுகள் தொடர்பான மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டத்திற்குப் பதிலாக புதிய மதுவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான முன்மொழிவு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால், 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால பாதீட்டின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த கருமத்திற்கான சட்ட மூலமொன்றைத் தயாரிக்குமாறு, சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# நியாயப்பாடு இல்லாத ஓர் அரசாங்கத்தை ஜனாதிபதி தொடரவிரும்புகிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் காரணிகள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

உயர் நீதிமன்றம் அதன் முன்னால் விசாரணைக்கு வந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான வழக்குகளில் மன்னன் சாலமனுக்கு இருந்த விவேகத்துடன் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இந்த தேர்தல்களை தடுப்பதற்கு அரசாங்கம் உச்சபட்சத்துக்கு முயற்சிக்கின்றது என்று கவலை கொண்ட எதிரணி கட்சிகளினால் முதல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தேர்தல்களை இரத்து செய்யுமாறு அல்லது ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடமிருந்து தேர்தல் ஆணைக்குழு கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. அரசாங்கம் மேற்கொள்கின்ற பல்வேறு முயற்சிகளை எதிரணி தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விளக்கிக் கூறியிருக்கிறார். தேர்தல்களை நடத்துவதற்கு போதுமான நிதி இல்லை என்ற அரசாங்கத்தின் ஏற்றுக் கொள்ளமுடியாத அறிவிப்பும் அந்த முயற்சிகளில் ஒன்று.

ஆனால், தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் தேர்தல் ஆணைக்குழு தேர்தல் தினமாக மார்ச் 9 ஆம் திகதியை அறிவித்து தொடர்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. தேர்தல்களை நடத்துவதாக ஆணைக்குழு உறுதியளித்திருப்பதால் மேற்கொண்டு தலையிடவேண்டியதேவை இல்லை என்று உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பில் கூறியது.

இரண்டாவது வழக்கை தற்போதைய தருணத்தில் தேர்தல்களை நடத்தக்கூடியதாக நாட்டின் பொருளாதார நிலைவரம் இல்லை என்று முறையிட்டு மனுதாரர் ஒருவர் தாக்கல் செய்தார். சட்டப் பிரகாரமான நடைமுறைகளை மனுதாரர் பின்பற்றவில்லை என்ற ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணையை பெப்ரவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. அந்த திகதியளவில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுவிடும். அரசாங்க ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான தினம் அதற்கு முதல் நாளாகும்.

தேர்தல் ஆணைக்குழு உட்பட இரண்டாவது மனுவை எதிர்க்கும் தரப்புகள் தேர்தல் செயன்முறைகள் திரும்பிவர முடியாத ஒரு கட்டத்தை அடைந்துவிட்டன என்று உறுதியாக வாதிடக்கூடியதாக இருக்கும். பொருளாதார நெருக்கடி நீண்டகாலத்துக்கு தொடரக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்பதும் அரசாங்கத்திடம் நிதியில்லை என்று நியாயம் கற்பித்து சகல தேர்தல்களும் ஒத்திவைக்கப்படக்கூடும் என்பதுமே இந்த வழக்கில் உட்கிடையாக இருக்கக்கூடிய ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தலாகும்.

தேர்தல் செயன்முறைகள் சமூக மட்டத்தில் இப்போது முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன. குழப்பங்கள் இல்லாமல் நாடுபூராவும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இதற்காக அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். மறுபுறத்தில், பொருளாதார இடர்பாடுகளுக்கும் வரி அதிகரிப்புகளுக்கும் எதிராக கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய நகரங்களில் சிவில் சமூக குழுக்களினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களை பொலிசார் தடுத்துவருகின்றனர். யாருக்கு வாக்களிப்பது என்று வாக்காளர்கள் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முன்னரான காலப்பகுதியில் உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த தங்களது அக்கறைகளை மக்கள் வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை இது வழங்கும்.

### கடுமையான குற்றச்சாட்டு

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு பல்வேறு வழி முறைகளை அரசாங்கம் முயற்சித்துப் பார்த்தது. உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் எதிர்மறையான மனநிலையின் முன்கூட்டிய எச்சரிக்கை அறிகுறியாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவர்களிடம் கேள்விகளை எழுப்பிய ஜனாதிபதியின் செயல் அமைந்தது.



தேர்தல்களுக்கான திகதியை தீர்மானிப்பதற்கு முன்னதாக கல்வியமைச்சு அதிகாரிகளுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்தாராய்ந்ததா என்பதும் அந்த கேள்விகளில் ஒன்று. இது ஆணைக்குழுவின் சுதந்திரத்தில் வேண்டாத ஒரு தலையீடு என்று கண்டனங்கள் கிளம்பின. ஜனாதிபதி பதவியேற்பதற்கு முன்னதாக போராட்ட இயக்கத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல் மக்களிடம் இருந்து தப்பியோடிக்கொண்டிருந்த தனது அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களின் நலன்களை அவர் பாதுகாக்கின்றார் என்ற கடுமையான குற்றச்சாட்டு இருக்கிறது. இந்த குற்றச்சாட்டை சமாளிக்கவேண்டியராக அவர் இருக்கிறார்.

போராட்ட இயக்கத்தை அடக்கியாடுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்த முறை குறித்து மக்கள் மத்தியில் கடுமையான வெறுப்புணர்ச்சி தொடருகிறது. இந்த காரணத்துக்காகத்தான் பெருமளவு வளங்களும் நிதியும் செலவாகும் என்ற போதிலும் கூட தேர்தல்கள் முக்கியமானவையாகின்றன. அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் மக்களின் ஆணையையும் நியாயப்பாட்டையும் கொண்டவர்களாக இருப்பதை விடவும் வேறு எதுவும் ஜனநாயக சமுதாயம் ஒன்றுக்கு முக்கியமானதாக இருக்க முடியாது.

ஊழல்தனமானவர்கள் என்று நம்பப்படும் அரசாங்க தலைவர்கள் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டை பொருட்படுத்தாதவர்களாக தொடர்ந்தும் நடந்து கொள்வது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் இவையெல்லாவற்றையும் மறுத்துக்கொண்டு இருக்கவோ அல்லது மீண்டும் பழைய நிலைவரமே ஏற்படுத்தப்பட்டிருப்பது தொடர்பில் மக்களின் கோபத்தையோ கருத்தில் எடுக்காமல் இருக்கவோ முடியாது.

வழமையான கேள்விப்பத்திர நடைமுறைக்கு வெளியே மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தற்போது மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் இதற்கு ஒரு உதாரணமாகும். இது தொடர்பில் இலங்கை மருத்துவர்கள் கல்லூரி, இலங்கை சத்தி ரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரி, இலங்கை மகப்பேற்று மற்றும் குழந்தை மருத்துவர்கள் கல்லூரி ஆகியவற்றின் கவுன்சில் அதன் ஆட்சேபனைகளை தெரிவித்திருக்கிறது.

வழமையாக மருந்து ஒன்றை இறக்குமதி செய்வதற்கு முன்னதாக தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதை மதிப்பீடு செய்து பதிவு செய்யவேண்டும் என்று அந்த அதிகார சபை வெளியிட்ட ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இறுதியாக நடைபெற்ற அதிகாரசபையின் மருந்துப்பொருட்கள் மதிப்பீட்டு குழுவின் கூட்டத்தில் இந்திய தொடர் கடனுதவியின் மூலமாக கொள்வனவு செய்யப்படவிருக்கும் பெருந்தொகையான சுமார் 330 மருந்துப்பொருட்களின் பட்டியல் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றில் எதுவுமே அதிகாரசபையினால் மதிப்பிடு செய்யப்படவோ அல்லது பதிவுசெய்யப்படவோ இல்லை.

### பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள்

துரதிர்ஷ்டவசமானதும் கவலைக்குரியது மான இந்த நிகழ்வுப்போக்குகள் கடன் மீளச் செலுத்துதலில் நிலைபேறான தன்மையை ஏற்படுத்துதல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பது மற்றும் இன, மத சிறுபான்மை சமூகத்தவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பது உட்பட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடைப் பிடிக்கின்ற மிகவும் நேர்மறையான நிலைப்பாடுகளை மலினப்படுத்துகின்றன.

இன, மத சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு காணப்படவேண்டிய அரசியல் தீர்வு நிலைபேறான ஒரு யதார்த்தமாக வேண்டும் என்ற ஜனாதிபதியின் கூற்று இவற்றில் மிகவும் முக்கியமானதாகும். அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் தொடர்பில் புரிந்துணர்வுடனும் ஒருவகை துணிச்சலுடனும் இரு பொருள்படுதலுக்கு அப்பாற்பட்ட முறையில் அவர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். தற்போதைய அரசியல் தலைவர்களில் எவரும் அத்தகைய துணிச்சலை வெளிப்படுத்த தயாராக இருந்ததில்லை.

ஜனாதிபதியாக ஒரு குறுகிய காலத்துக்குள் விக்கிரமசிங்க வட பகுதிக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்திருக்கிறார். போரினால் நிர்மூலமான அந்த பகுதியின் சிவில் சமூகத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் நேசக்கரத்தை நீட்டுகிறார். வடபகுதி நாட்டின் ஏனைய பகுதிகளினதும் கண்டி, காலி, மாத்தறை போன்ற ஏனைய நகரங்களினதும் வளர்ச்சியை எட்டிப்பிடிப்பதற்கு கணிசமான முதலீடுகளை வேண்டிநிற்கிறது.

மிகவும் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின்போது அவர் வடபகுதியின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான தனது நோக்கை வெளிப்படுத்தியதுடன் நீண்டகாலமாக இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்த நிலங்களின் ஒரு பகுதி அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுவதையும் உறுதிசெய்தார். சுதந்திரதின கொண்டாட்டத்தின்போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவதை ஜனாதிபதி உறுதி செய்தார். சந்தேகத்துக்கிடமின்றி அது சிறியதொரு நல்லெண்ணச் சமிக்ஞை என்றாலும் நாட்டின் நான்கு பிரதான இனத்துவ சமூகங்களின் மூன்று சமூகங்களினால் முதல் மொழியாக பேசப்படுகின்ற தமிழ்மொழிக்கு சமத்துவ அங்கீகாரம் வழங்கவேண்டிய அவசியத்தை உருவகப்படுத்தி நிற்கிறது.

ஆனால், ஜனாதிபதியின் இந்த நேர்மறையான உணர்வுகளும் நடவடிக்கைகளும் அவர் தனது பக்கத்தில் இருப்பதாக நம்புகின்றவர்களின் அதிகார அரசியல் தேவைப்பாடுகளினாலும் நிர்ப்பந்தங்களினாலும் மலினப்படுத்தப்படுகின்றன. உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான பிரச்சினையும் அதை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு முயற்சிகளும் மக்களின் கண்களில் தார்மீக நியாயப்பாடு இல்லாததாக தோன்றுகின்ற அரசாங்கம் ஒன்றைத் தொடர்ந்து நடத்த ஜனாதிபதி விரும்புகிறார் என்ற ஒரு எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது.

ஊழல்தனமானவர்கள் என்று பரவலாக நம்பப்பட்ட அரசாங்க தலைவர்கள் மீண்டும் பதவிகளில் அமர்த்தப்பட்டு பாதுகாக்கப்படுவதும் மக்கள் போராட்ட இயக்கத்தின் இளைய தலைவர்களும் முதிய தலைவர்களும் கொடுமைப்படுத்தப்படுவதும் ஜனாதிபதியின் உன்னதமான பொருளாதார சீர்திருத்த முயற்சிகளையும் இன, மத சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் ஆதரிக்க விரும்புகின்றவர்களிடம் இருந்து கூட அவரை தூரவிலக்குகிறது. ●

# இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா?

# பிரசாரத்தை ஆரம்பிக்காத வேட்பாளர்கள்!

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் இலங்கை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 09ம் தேதி, தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது.

எனினும், தேர்தலை நடத்துவதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் பல தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதற்கு தடை விதிக்குமாறு வலியுறுத்தி மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், தேர்தலை நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என கோரியும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தேர்தலை நடத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கிவிட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை சட்டத்திற்குட்பட்டு நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு உறுதி வழங்கியுள்ளமையினால், தேர்தலை நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்க வேண்டிய தேவை இல்லை என உயர்நீதிமன்றம் அறிவித்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இதன்படி, தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எந்தவித தடையும் கிடையாது.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துமாறு கோரி, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனுகள் மீதான விசாரணைகளின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தேர்தலை நடத்துவதற்கு தடை விதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் 23ம் தேதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதம் 9ம் தேதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இடைநிறுத்துமாறு உத்தரவிட வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற கேணல் டபிள்யூ.எம். கே.விஜய சுந்தரவினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.



மனுத்தாரர் தரப்பு, குறித்த மனுவை உரிய வகையில் தாக்கல் செய்ய வில்லை என இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் முன்னிலை யான ஜனாதிபதி சட்டத் தரணி சாலிய பீரிஸ், உயர்நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த மனுத்தாரர், தான் இலங்கையின் ஏற்றுக்கொள்ளப் பட்ட வாக்காளர் என்பதை உறுதிப் படுத்துவதற்கான ஆவணங்களை தாக் கல் செய்ய வில்லை எனவும் அவர் நீதி மன்றில் குறிப்பிட் டுள்ளார்.

இதனால், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிக்குமாறு சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

எனினும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முக்கியமான தேவைகளுக்கு மாத்திரம் பணத்தை செலவிட வேண்டும் என அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சத்திய கடுதாசியில் தெரிவித்துள்ளதாக மேலதிக சொலிசிடர் ஜெனரல் நெரில் புல்லே தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்ட மாஅதிபர் சார்பில் மேலதிக சொலிசிடர் ஜெனரல் நெரில் புல்லே உயர்நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

எவ்வாறாயினும், இந்த வழக்கு மீதான விசாரணைகளை எதிர்வரும் 23ம் தேதி வரை நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

**தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் தொடர்ந்தும் நிலவி வருகின்றமையினால் பெரும்பாலான வேட்பாளர்கள் இதுவரை தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என்பது உறுதியாகிறது.**

### தேர்தலை நடத்த பணம் வழங்கப்படவில்லை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான பிப்ரவரி மாத செலவினங்களை ஈடு செய்வதற்கு பணத்தை வழங்கக் கோரி, தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சுக்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

பிப்ரவரி மாத செலவினங்களுக்கு மட்டும் 770 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு, நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

எனினும், இன்று வரை அதற்கான பதில் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு தாம் தலை வணங்குவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவிக்கின்றார். தேர்தலை நடத்துவதற்கு முதற்கட்ட மாக 25 மில்லியன் ரூபா தமக்கு கிடைத் துள்ளமையினால், அதனை கொண்டு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்து வருவதாகவும் அவர் கூறு கிறார்.

### சூடு பிடிக்காத தேர்தல் களம்

இலங்கையில் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே காணப்படும்போதிலும், தேர்தல் களம் இன்று வரை சூடுபிடிக்கவில்லை.

இலங்கையில் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தல்களில் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையிலும் பிரசார நடவடிக்கை களில் மந்த நிலைமை காணப்படுகின்றது.

தேர்தல் பிரசாரங்கள் இதுவரை ஆரம்பிக்கப் படாமை தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உள்ளூராட்சி சபை வேட்பாளரும், கொட்டகலை பிர தேச சபைத் தவிசாளரு மான ராஜமணி பிரசாத்திடம், வினவியது.

‘தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற கேள்வி உள்ளது. பொருளாதார பிரச்சினை இன்று எல்லாருக்கும் உள்ளது. பிரசாரத்திற்கு பதாகைகள், போஸ்டர்கள் அச்சிட வேண்டும். தேர்தலுக்கு யாரிடமாவது கடனை வாங்கியே இதனை செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு பிரசாரத்திற்காக கடனை வாங்கி, இந்த வேலைகளை செய்து பின்னர், தேர்தல் இல்லை என அறிவித்தால், வாங்கிய கடனுக்கு எப்படி வட்டி கட்டுவது, எப்படி கடனை திருப்பி செலுத்துவது என்ற பயம் உள்ளது.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால், சம்பளத்தை சரி கொடுக்கலாம். அதுமாத்திரம் அல்ல. மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியிருப்போம். அதனையும் நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அதனால் நான் மாத்திரமல்ல, பெரும்பாலான வேட்பாளர்கள் இன்னும் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை” என ராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

தேர்தல் நடக்குமா என்ற சந்தேகத்தினாலேயே தான் இன்னும் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என பொத்துவில் பிரதேச சபை சின்னப் புதுக்குடியிருப்பு வட்டார சுயேட்சை வேட்பாளர் ஏ.எஸ். மஹரூப் குறிப்பிடுகின்றார்.

‘தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற ஒரு சந்தேகம் எனக்குள் இருக்கிறது. நடக்கக்கூடிய சாத்தியம் இல்லை என தோன்றுகின்றது. நாட்டு நிலைமை அப்படி இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அந்த விடயங்களினால் பிரசாரத்தில் நான் ஈடுபடவில்லை” என சுயேட்சை வேட்பாளர் ஏ.எஸ். மஹரூப் தெரிவிக்கின்றார்.

தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் தொடர்ந்தும் நிலவி வருகின்றமையினால் பெரும்பாலான வேட்பாளர்கள் இதுவரை தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என்பது உறுதியாகிறது. ●



# நடன ஆசிரியர் நியமனம் தருவதாக கூறி கல்முனையில் பல இலட்சம் ரூபா மோசடி!

## பொலிஸாரின் அதிரடியால் நால்வர் கைது

அம்பாறை, பெப். 15

நடன ஆசிரியர் நியமனம் ஒன்றை பெற்றுத்தருவதாக கூறி பல இலட்சம் ருபாய்க்களை வங்கி ஊடாக மோசடி செய்த குழுவினர் கல்முனை தலைமையக பொலிஸார் விரித்த வலையில் சிக்கினர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு கடந்த வியாழக்கிழமை கல்முனை பகுதியை சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் என்பவர் முறைப்பாடு ஒன்றை அளித்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில், நடன ஆசிரியர் நியமனம் ஒன்றினை பெறுவதற்கு கடந்த திங்கட்கிழமை ஒரே நாளில் கட்டம் கட்டமாக முறையே 600000, 120000, 120000 என 8 இலட்சத்து 40ஆயிரம் ரூபாய்க் களை வங்கி ஊடாக ஒருவருக்கு வைப்பு செய்த நிலையில் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த நியமனத்தை தனது மகனுக்கு பெற்றுக் கொடுப்ப தற்காகவே குறிப்பிட்ட பணத்தை வழங்கியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவில் தனது மகன் நடன பாடத்தில் பட்டத்தை நிறைவு செய்திருந்த இந்த நியமனத்தை பெற முயற்சித்திருந்ததாகவும் கல்வி அமைச்சில் உள்ள ஒரு பதவி நிலை உயர் அதிகாரியின் பெயரை பயன்படுத்தி இந்த மோசடி இடம்பெற்றுள்ளதைப் பின்னர் அறிந்துள்ளதாகவும் அம் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் புத்திகவின் வழிநடத்தலில் பொலிஸ் குழுவினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இந் நடவடிக்கையில் 2 பெண்கள், 2 ஆண்கள் பொலிஸாரினால் திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் இருந்து கைதாகியதுடன் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விசாரணையின்போது கைதானவர்களின் வாக்கு மூலத் தின்படி சிறைச்சாலை ஒன்றில் சிறைவாசம் அனுபவிக்கின்ற நபர் ஒருவரின் தொடர்பின் விளைவாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் உள்ளவரே தம்மை வழிநடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கைதான பெண் சந்தேக நபரின் வங்கிக் கணக்கில் தொடர்ச்சியாக அதிகளவான பணக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் பொலிஸார் விசாரணையில் கண்டறிந்துள்ளனர்.

அத்துடன் நடன ஆசிரியர் நியமனத்திற்காக மற்றுமொரு பெண் சந்தேக நபரின் வங்கி கணக்கிலக்கத்துக்கும் ஏனைய சந்தேக நபர்களது வங்கிக் கணக்கிலக்கத்துக்கும் ஒரு நாளில் எட்டு இலட்சத்தி 40 ஆயிரம் வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மோசடியில் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவரும் பொலிஸ் நிலையத் துக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

குறித்த அதிகாரியும் ஏற்கனவே தனது பெயரில் இவ்வாறு மோசடி இடம் பெற்று வருவதாக கூறி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு வழங்கி இருப்ப தாக பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இந்த மோசடியில் கைதான அனைத்து சந்தேக நபர்களையும் ஞாயிற்றுக்கிழமை கல்முனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# மக்களுக்கான சேவையை தளராது முன்னெடுப்போம்

## அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் அழைப்பு

அம்பாறை, பெப். 15

“நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில், மனம் சோர்ந்த நிலையில் பணிகளை முன்னெடுக்கவேண்டிய நிலையிலுள்ளோம். எனினும் இத்தகைய சவால்களுக்கு முகம் கொடுத்து மக்கள் சேவையைத் தளராது முன்னெடுப்பொம்”

இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் கூறினார்.

நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற “தூறல்” நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் வருடாந்த ஒன்று கூடலும், பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஒருங்கே “தூறல்: எனும் தலைப்பில் பெரு நிகழ்வாக நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லதீப் தலைமையில், நிந்தவூர் அமீர் மஹால் திறந்த வெளி அரங்கில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கல்முனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, பொத்துவில் பிரதேச செயலாளர்கள் உட்பட முக்கிய உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் நிந்தவூர் பிரதேச செயலகம் சிறப்பான இடங்களைப் பெற்று பெருமை சேர்த்திருப்பதற்கு, சிறந்த தலைமை நிருவாகமும், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் அர்ப்பணிப்பான மக்கள் சேவைகளுமே காரணமாகும்.

பேதமின்றி உணர்வுகளைப் பகிரும் இந்த நிகழ்வில் இத்தகைய சாதனைகளைத் தொடரும் வண்ணம் நாம் உறுதி கொள்ள வேண்டும்.

நாட்டின் இன்றைய இக்கட்டான பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில், அரச பணிப்பாளர்களாகிய நாமும் பெரும் பொருளாதார சுமைக்கு உட்படவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம்.

இதனால் மனம் சோர்ந்த நிலையில் பணிகளை முன்னெடுக்க வேண்டிய நிலமையிருப்பினும், மாற்று சிந்தனையோடு, பொருளாதார நெருக்கடிபற்றிய மன நிலை நீங்கி இயலுமான சேவைகளை ஆற்ற வேண்டிய கட்டாய நிலமையையும் நாம் உணர்ந்து செயற்படவேண்டும்.

இதேவேளை இன்றைய நிலையில் அரச நிதியைவிடவும், சமூகப் பிரமுகர்கள், தனவந்தர்களின் உதவிகளுடன் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிடவும் நாம் முயற்சிக்க வேண்டும்.

அரச பணி மூலம் நாம் ஆற்றும் சேவைகள் என்றும் தடம் பதிக்கத் தக்கதாகவும் அமைய வேண்டும்-என்றார்.

(அ-06)

### கல்வி tv CHANNEL-1

**15.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**15.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு மாகாணத்தில் அரச நிதி வீண் விரயம்

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு



அம்பாறை, பெப். 15

**கிழக்கு மாகாணத்தில் அரச நிதி வீண்விரயம் செய்யப்படுகின்றது. நாடு தற்போதுள்ள நிலையில் இதனைத் தவிர்த்தால் பல இலட்சம் ரூபாய்களை மாதாந்தம் மீதப்படுத்த முடியும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

குறிஞ்சாக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அரசாங்கம் நிதி நெருக்கடியில் உள்ளதாக ஜனாதிபதியும் ஏனையோரும் கூறி வருகின்ற போதிலும் அவர்களே நிதி வீண் விரயங்களும் செய்து வருகின்ற னர். இப்படி இருந்தால் எப்படி நாட்டை முன்னேற்ற முடியும் எனக் கேட்க விரும்புகின்றேன்.

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனமோ சேவை நீடிப்போ வழங்குவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றபோதிலும் கிழக்கு மாகாணத்தில் ஓய்வு பெற்ற பிரதிப் பிரதம செயலாளர் ஒருவருக்கு இம்மாகாண ஆளுநர் சேவை நீடிப்பு வழங்கியுள்ளார்.

இந்தப் பதவிக்கு பொருத்தமானவர்கள் கிழக்கு மாகாண அரச சேவையில் இருக்கின்ற போதிலும் தனது சுயநலம் கருதி ஆளுநர் இந்த சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

உயர் அதிகாரிகளின் பதவி தொடர்பான சகல விடயங்களும் பொதுச்சேவை ஆணைக் குழுவுக்குரியது. பொதுச்சேவை ஆணைக்குழு செய்யவேண்டிய பணியை இப்போது ஆளுநர் செய்கின்றார். இந்த அரசாங்கத்தினால் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளதா அல்லது அங்கும் அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

கிழக்கு மாகாணக் கல்விப் பகுதியில் ஓய்வுபெற்றவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் ஓய்வூதியமும் பெற்று மாதச் சம்பளமும் பெற்று வருகின்றனர். தகுதியானவர்களுக்கு பொருத்தமான இடமாற்றங்களை வழங்கி ஓய்வு பெற்றவர்களை வீட்டுக்கு அனுப்பினால் பெருந்தொகையை மீதப்படுத்தலாம்.

கிழக்கு மாகாணசபையில் உள்ள வீடமைப்பு அதி காரசபை மாகாண மக்க ளுக்கு வீடு கட்டிக் கொடுத் ததை விட தவிசாளரும், பணிப்பாளர் சபையினரும் ஏனையோரும் பெறும் கொடுப்பனவுகளே அதிகமாகும். இந்த வீண்விரயம் குறித்து ஏன் கவனம் செலுத்தவில்லை.

அதேபோல சுற்றுலா அதிகார சபை மூலம் மாகாணசபை பெற்ற வருமானம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அங்கு தவிசாளரும், பணிப்பாளர் சபையினரும் ஏனையோரும் மாதாந்தம் சம்பளம் பெறுகின்றனர்.

இது கிழக்கு மாகாணத்தில் உள்ள நிதி வீண்விரயங்களுக்கு உதாரணம். இது போல ஏனைய மாகாணங்களிலும், மத்திய அரசிலும் உள்ளன. இது போன்ற வீண்விரங்களை அரசு குறைத்து மக்களின் சுமைகளைக் குறைக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் இப்படியான வீண்விரயங்களைக் குறைக்காது. ஏனெனில் இதன் மூலம் நன்மை பெறுபவர்கள் அரசிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு வேண்டப்பட்டவர்கள். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வதென்ன? மக்கள் எப்படி கஸ்டப் பட்டாலும் தான் சார்ந்தவர்கள் மட்டும் நன்மையடைய வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசிலுள்ளவர்கள் பின்பற்றுவதாகும்.

எனவே, மக்களைக் கஸ்டப்படுத்தி தான் சார்ந்தவர்களுக்கு பயன்பெற்றுக் கொடுக்கும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கனுப்ப அனைவரும் இந்த தேர்தலில் அரசாங்கத்தக்கு எதிராக வாக்களிக்கவேண்டும்-என்றார். (அ)

# "சஜித் மாத்திரமே ஒரே தீர்வு!"




அம்பாறை, பெப். 15

"முன்னொருபோதுமில்லாத வகையில் நாடு பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இதனை மீளக்கட்டி எழுப்பவேண்டுமாக இருந்தால் இன்று இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு சஜித் பிரேமதாஸ மாத்திரமே."

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தமிழ்ப்பிரிவு இணைப்பாளருமான வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-இலங்கையில் கடந்த ஆறுத சாப்த காலமாக மக்கள் வாக்களித்து வந்திருக்கின்றார்கள். ஆனால் இம்முறை முதல் தடவையாக ஐக்கிய மக்கள் சக்தி நாட்டில் சகல பாகங்களிலும் தேர்தலில் இறங்கி உள்ளது. 70 -80- 90 களில் ஜனசவிய கம்முதாவ போன்ற பல திட்டங்களை நாட்டுக்கு புகுத்தி மக்களை விமோசனப்படுத்திய அமரர் பிரேமதாஸவின் புதல்வன் சஜித் பிரேமதாஸ ஒரே ஒரு முதுகெலும்புள்ள தலைவராக இருக்கிறார்.

ஆளும் கட்சியில் இல்லாமலே தற்போது 70 பாடசாலைகளுக்கு 3400 லட்சம் ரூபாய் பெறுமதியான பஸ்களை வழங்கி இருக்கின்றார். 56 வைத்தியசாலைகளுக்கு 1919 இலட்ச ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 128 லட்ச ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நாங்கள் கிராம ரீதியாக ஒவ்வொரு பிரதேசத்திலும் பல பிரச்னைகளை இனங்கண்டு இருக்கின்றோம். அவற்றை தீர்ப்பதற்கான திட்டத்தையும் வகுத்திருக்கின்றோம். மார்ச் மாதம் ஒன்பதாம் திகதிக்கு பிற்பாடு இவை அனைத்தும் அமுலுக்கு வரும்.

கடந்த 25 வருடங்களாக ரணில் பல பதவிகளை வகுத்து பல வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

எதனையுமே அவர் செயல்படுத்தவில்லை. அதுபோலவே நாட்டின் இனப்பிரச்னையை அவரால் தீர்த்து வைக்க முடியாது-என்றார். (அ)



காரைதீவு விபுலானந்த சதுக்கத்தில் அமைந்துள்ளஅரசடி சிறி சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சத சங்காபிஷேக பூசை பாற்குடபவனியுடன் சங்காபிஷேககுரு சிவசிறி சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

# ஹெரோயின் கடத்தல் குழு ட்ரோன்,ஸ்கானருடன் கைது

## கல்முனை பொலிஸார் அதிரடி



அம்பாறை, பெப். 15

ஹொரோயின் போதைப் பொருள் முகவராக செயற்பட்ட இளைஞன் உள்ளிட்ட குடும்பப் பெண் ட்ரோன் கருவி நவீன ஸ்கானர் கருவிகளுடன் கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் வை.டி செலரின் (40313) தகவலுக்கமைய செயற்பட்ட பொலிஸ் குழுவினர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 33 வயது மதிக்கத்தக்க போதைப்பொருள் வியாபாரியை சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேக நபரிடம் இருந்து போதைப்பொருளை அளக்கின்ற இலத்திரனியல் தராசு மற்றும் 5 கிராம் 140 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்டவைகள் மீட்கப்பட்டன.

இச்சந்தேக நபர் கடந்த 13ஆம் திகதி வீதியில் பயணம் செய்த பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றினால் மோதி தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சந்தேக நபர் அக்கரைப் பற்று,நிந்தவூர், கல்முனை, பெரிய நீலாவணை, மருதமுனை, சம்மாந்துறை பகுதிகளுக்கு போதைப்பொருட்களை விநியோகிக்கின்ற பிரதான வியாபாரி என பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து கைதான சந்தேக நபரின் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதியில் உள்ள வீடுகள் பொலிஸாரின் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது கல்முனை பகுதி செயிலான் வீதியில் அமைந்துள்ள சந்தேக நபரின் சகோதரியின் வீடு மற்றும் சாய்ந்தமருது பகுதியில் உள்ள சந்தேக நபரின் வீடும் பொலிஸ் குழுக்களினால் சோதனைக்குள் ளாக்கப்பட்டது.

இதன்போது ஒரு தொகுதி போதைப்பொருட்கள் 2 அதி நவீன ஸ்கானர்கள், சி.சி.ரி.வி, டிவீஆர் உபகரணம் பதிவு செய்யப்படாத ட்ரோன் பறக்கும் சாதனம் உள்ளிட்டவைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

குறித்த வீட்டில் இருந்த சந்தேக நபரின் சகோதரியான 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும் கல்முனை தலைமையக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். (அ)

# ரஷ்ய துருப்புகளுக்கு பெரும் பின்னடைவு!

## பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு தகவல்



**லண்டன், பெப். 15**

**உக்ரைனில் ரஷ்ய துருப்பினர் பாரிய பின்னடைவை எதிர்கொண்டு வருவதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

பிரிட்டன் புலனாய்வுத் தரப்பினரின் தகவல்களுக்கு அமைய அதிக அளவிலான ரஷ்யபடையினர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களில் அதிக எண்ணிக்கையிலான ரஷ்ய படைத்தரப்பினர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த காலப்பகுதியினில், நாளாந்தம் 800 பேர் பலியாகியிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ரஷ்ய படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களை விட இது நான்கு மடங்கு அதிகம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய அதற்கு முந்திய 24 மணி நேரத்தினுள் ஆயிரத்து 140 ரஷ்யர்கள் பலியானதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

இதற்கமைய, உக்ரைனுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தத்தை ரஷ்யா ஆரம்பித்த நாள் முதல் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 880 படையினரை ரஷ்யா இழந்துள்ளது. இந்த நிலையில், 'நியூயோக் ரைம்ஸ்' இதழுக்கு அமெரிக்க சிரேஷ்ட இராணுவ தளபதி ஒருவர் தெரிவித்த கருத்தில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து இரண்டு லட்சம் ரஷ்ய துருப்பினர் பலியாகியோ அல்லது படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்க பல்கலையில் நேற்று துப்பாக்கிச் சூடு!

## ஐந்து பேர் உயிரிழப்பு



நியூயோர்க், பெப். 15

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாண பல்கலைக்கழகத்தில் நேற்று அந்நாட்டு நேரப்படி இரவு 10 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 2 கட்டடங்களில் அடுத்தடுத்து துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்த நிலையில், மேலும் பலர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் பல்கலைக்கழகத்தில் இருந்த மாணவர்கள், ஆசிரியர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும், துப்பாக்கிச்சூடு நடத்தியது யார் என்று பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். பல்கலைக்கழகம் முழுவதும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (அ)

# நிலநடுக்கத்தால் பாதிப்புற்றோருக்கு பிரிட்டனில் உள்ள நிதி திரட்டும் மசூதி!



லண்டன், பெப். 15

சிரியா மற்றும் துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டவும் பொருட்களை வழங்கவும் ஒரு மசூதி தனது சமூகத்தை ஒன்றிணைத்துள்ளது.

கார்டிப்பின் கேத்தேஸ் பகுதியில் உள்ள டார் யு.எல்-இஸ்ரா மசூதி இதுவரை 25,000 பவுண்டுகள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்குவதற்காக ஐந்து வான்கள் அளவில் ஆடைகள் மற்றும் காலணிகளை திரட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த மூன்று நாட்களில் மட்டும் வேல்ஸில் 1.9 மில்லியன் பவுண்டுகள் திரட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியா முழுவதும், பேரிடர் அவசரநிலைக் குழு, 60 மில்லியன் பவுண்டுகளுக்கும் அதிகமாக திரட்டியுள்ளது.

பேரழிவில் 33,000க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதாக அறியப்படுகிறது, நூறாயிரக்கணக்கானோர் வீடற்றவர்களாக உள்ளனர். (அ)

# இரு எல்லைக் கடவைகளை திறக்க சிரியா அரசு சம்மதம்

## பேரழிவுக்கு உள்ளானோருக்கு உதவுவதற்கு



நியூயோர்க், பெப். 15

கடந்த வாரம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் பேரழிவுக்குள்ளான சிரியாவுக்கு உதவிகளை வழங்குவதற்காக மேலும் இரண்டு எல்லைக் கடவைகளை திறக்க சிரியா அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

தாங்கள் இப்போது ஒரே ஒரு கடவை மட்டுமே பயன்படுத்துகின்ற நிலையில், இது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பல சிரியர்கள் தங்கள் போரினால் பாதிக்கப்பட்ட நாட்டிற்கு உதவி இல்லாததால் கோபமடைந்துள்ளனர்.

நாட்டின் மீது விதிக்கப்பட்ட மேற்கத்திய பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தால் மீட்புப் பணிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி பஷர் அல்-அசாத் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால், அசாத் அரசாங்கத்தின் தவறான நிர்வாகம் மற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளுடனும் ஈடுபட மறுப்பதும் முக்கிய தடைகள் என்று சர்வதேச உதவிக் குழுக்கள் கூறுகின்றன.

துருக்கியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வீடிழந்துள்ளனர், சிரியாவில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று உதவி அமைப்புகள் எச்சரிக்கின்றன.

இரு நாடுகளிலும் உள்ள மீட் புக் குழுக்கள் இப்போது பரந்த பகுதியில் மீட்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டன. மேலும் உயிர் பிழைத்தவர்களைக் கண்டு பிடிப்பதற்கான வாய்ப்புகள் மங்கி வருகின்றன.

இரு நாடுகளிலும் பயங்கர நிலநடுக்கத்தில் ஏறக்குறைய 40,000 பேர் உயிரிழந்துள்ளனர் என அறியப்படுகிறது. (அ)

# எங்கள் வான்பரப்பில் 10 முறைக்கு மேல் பலூன்களை பறக்கவிட்டது அமெரிக்கா!

## சீனா பகிரங்கக் குற்றச்சாட்டு

பீஜிங், பெப். 15

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து அமெரிக்கா தனது வான்வெளியில் 10 முறைக்கு மேல் சட்டவிரோதமாக அதிக உயரத்தில் பலூன்களை பறக்கவிட்டதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கப் போர் விமானங்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட சீன பலூனினால் ஏற்பட்ட பதற்றங்களுக்கு மத்தியில் இந்த தகவல் வந்துள்ளது.

வழக்கமான ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே, சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்- அமெரிக்க பலூன்கள் மற்ற நாடுகளின் வான்வெளியில் சட்டவிரோதமாக நுழைவது பொதுவானது. கடந்த ஆண்டு முதல், அமெரிக்க உயரமான பலூன்கள், தொடர்புடைய சீன அதிகாரிகளின் அனுமதியின்றி, 10 முறைக்கு மேல் சீனாவின் வான்வெளியை சட்டவிரோதமாக கடந்துள்ளன.

சீனாவுக்கு எதிராக நெருங்கிய உளவுப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கா அடிக் கடி போர்க்கப்பல்களையும் விமானங்களையும் அனுப்பி வருகின்றது. இது கடந்த ஆண்டு மொத்தம் 657 முறை மற்றும் இந்த ஜனவரியில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் தென் சீனக் கடலில் 64 முறை கடந்துள்ளது.

நீண்ட காலமாக, அமெரிக்கா தனது சொந்த தொழில்நுட்ப நன்மைகளை துஷ்பிரயோகம் செய்து பெரிய அளவிலான மற்றும் கண்மூடித்தனமான வயர் ரேப்பிங் மற்றும் அதன் நட்பு நாடுகள் உட்பட உலகம் முழுவதிலுமிருந்து இரகசியங்களை திருடுகிறது-என்றார்.



சீனா தனது கிழக்கு கடற்கரைக்கு அருகில் பறக்கும் அடையாளம் தெரியாத ஒரு பொருளை சுட்டு வீழ்த்துவதற்கு தயாராகி வருவதாக சீனா கூறிய ஒரு நாளுக்குள் இந்த செய்தி வந்துள்ளது.

இதற்கிடையில், சீனாவின் ஷான்டாங் மாகாணத்தில் உள்ள கடல்சார் அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை ரிசாவோ துறைமுக நகருக்கு அருகிலுள்ள நீரில் அடையாளம் தெரியாத பறக்கும் பொருளை கண்டதாகவும், அதை சுட்டு வீழ்த்துவதற்கு தயாராகி வருவதாகவும் அரசு நடத்தும் செய்தி நிறுவனமான தி பேப்பர் தெரிவித்துள்ளது. அது என்ன வகையான பொருள், எங்கிருந்து வந்திருக் கலாம் அல்லது எந்த உயரத்தில் பறந்து கொண்டிருந்தது என் பதை அறிக்கை குறிப்பிடவில்லை.

உள்ளூர் நேரப்படி திங்கட்கிழமை பிற்பகல் வரை, சீன அதிகாரிகள் மற்றும் அரசு ஊடகங்கள் எந்தப் புதுப்பிப்புகளையும் வழங்கவில்லை, மேலும் பொருள் ஏற்கனவே அகற்றப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. (அ)

ஈழநாடு



# மகளிர் பிறீமியர் லீக் ஏலத்தின் முழு விவரம்!

மும்பை, பெப். 15

முதல் மகளிர் பிறீமியர் லீக் (டபிள்யூ. பி. எல்.) தொடருக்கான ஏலத்தில் ஐந்து அணிகளால் வாங்கப் பட்டுள்ள வீராங்கனைகளின் விவரம் முழுமையாக வருமாறு,

87 வீராங்கனைகள் மொத்தமாக இந்த ஏலத்தில் அணிகளால் வாங்கப்பட்டுள்ளனர். இவர்களது மொத்த தொகை 59 கோடியே 50 இலட்சம் இந்திய ரூபாய் ஆகும். இதில் 30 வீராங்கனைகள் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள். 448 வீராங்கனை கள் ஏலத்தில் பங்கேற்றனர்.



வரும் மார்ச் 4 முதல் 26 வரையில் முதல் தொடர் நடை பெறவுள்ளது. மகளிர் கிரிக் கெட்டை அடுத்த நிலைக்கு அழைத்து செல்லும் வரலாற்று சிறப்புமிக்க தருணம் இது என முன்னாள் வீரர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்துள்ளனர்.

**மும்பை இந்தியன்ஸ்**

ஹர்மன்பிரீத் கவுர் (1.8 கோடி), நாட் ஸ்கிவர் (3.2 கோடி), அமெலியா கெர் (1 கோடி), பூஜா வஸ்த்ரகர் (1.9 கோடி), யஸ்திகா பாட்டியா (1.5 கோடி), ஹீதர் கிரஹாம் (30 இலட்சம்), இசபெல்லா (30 இலட்சம்), அமன்ஜோத் கவுர் (50 இலட்சம்), தாரா குஜர் (10 இலட்சம்), சைகா இஷாக் (10 இலட்சம்), ஹேலி மேத்யூஸ் (40 இலட்சம்), ட்ரியோன் (30 இலட்சம்), ஹியூமிரா காசி (10 இலட்சம்), பிரியங்கா பாலா (20 இலட்சம்), சோனம் யாதவ் (10 இலட்சம்), ஜிந்திமணி கலிதா (10 இலட்சம்), நீலம் பிஷ்ட் (10 இலட்சம்)

**குஜராத் ஜெயண்டஸ்**

ஆஷ்லே கார்ட்னர் (3.2 கோடி), பெத் மூனி (2 கோடி), சோபியா (60 இலட்சம்), அனபெல் சதர்லேண்ட் (70 இலட்சம்), ஹர்லீன் தியோல் (40 இலட்சம்), டீன்ட்ரா டாட்டின் (60 இலட்சம்), சினே ராணா (75 இலட்சம்), சபினேனி மேகனா (30 இலட் சம்), ஜார்ஜியா வேர் ஹாம் (75 இலட்சம்), மான்சி ஜோஷி (30 இலட்சம்), ஹேமலதா (30 இலட்சம்), மோனிகா படேல் (30 இலட்சம்), தனுஜா கன்வர் (50 இலட்சம்), சுஷ்மா வர்மா (60 இலட்சம்), ஹர்லி காலா (10 இலட்சம்), பருணிகா சிசோடியா (10 இலட்சம்), ஷப்னம் ஷகீல் (10 இலட்சம்), அஷ்வனி குமாரி (35 இலட்சம்)

**டெல்லி கப்பிட்டல்ஸ்:**

ஜெமிமா ரோட்ரிக்ஸ் (2.2 கோடி), மெக் லானிங் (1.1 கோடி), ஷஃபாலி வர்மா (2 கோடி), ராதா யாதவ் (40 இலட்சம்), ஷிகா பாண்டே (60 இலட்சம்), மேரி சேன் (1.5 கோடி), டிட்டஸ் சது (25 இலட்சம்), ஆலிஸ் கேப்ஸி (75 இலட்சம்), தாரா நோரிஸ் (10 இலட்சம்), லாரா ஹாரிஸ் (45 இலட்சம்), ஜாசியா அக்தர் (20 இலட்சம்), மின்னு மணி (30 இலட்சம்), ஜெஸ் ஜோனாசென் (50 இலட்சம்), தனியா பாட்டியா (30 இலட்சம்), பூனம் யாதவ் (30 இலட்சம்), சினேகா தீப்தி (30 இலட்சம்), அருந்ததி ரெட்டி (30 இலட்சம்), அபர்ணா மோண்டல் (10 இலட்சம்)

**றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்**

ஸ்மிருதி மந்தனா (3.4 கோடி), சோஃபி டெவின் (50 இலட்சம்), எலிஸ் பெர்ரி (1.7 கோடி), ரேணுகா சிங் (1.5 கோடி), ரிச்சா கோஷ் (1.9 கோடி), எரின் பர்ன்ஸ் (30 இலட்சம்), திஷா கசத் (10 இலட்சம்), இந்திராணி ராய் (10 இலட்சம்), ஸ்ரேயங்கா பாட்டீல் (10 இலட்சம்), கனிகா அஹூஜா (35 இலட்சம்), ஆஷா ஷோபனா (10 இலட் சம்), ஹீதர் நைட் (40 இலட்சம்), டேன் வான் (30 இலட்சம்), ப்ரீத்தி போஸ் (30 இலட் சம்), பூனம் கெம் னார் (10 இலட்சம்), கோமல் சன்சாத் (25 இலட்சம்), மேகன் ஷட் (40 இலட்சம்), சஹானா பவார் (10 இலட்சம்)

**உ. பி. வாரியர்ஸ்:**

சோஃபி எக்லெஸ்டோன் (1.8 கோடி), தீப்தி சர்மா (2.6 கோடி), தஹ்லியா மெக்ராத் (1.4 கோடி), ஷப்னம் இஸ்மாயில் (1 கோடி), அலிசா ஹீலி (70 இலட்சம்), அஞ்சலி சர்வானி (55 இலட்சம்), ராஜேஸ்வரி கெய்க் வாட் (40 இலட்சம்), பார்ஷவி சோப்ரா (10 இலட்சம்), ஸ்வேதா செஹ்ராவத் (40 இலட்சம்), யாஷஸ்ரீ (10 இலட்சம்), கிரண் நவ்கிரே (30 இலட்சம்), கிரேஸ் ஹாரிஸ் (75 இலட்சம்), தேவிகா வைத்யா (1.4 கோடி), லாரன் பெல் (30 இலட்சம்), லக்ஷ்மி யாதவ் (10 இலட்சம்), சிம்ரன் ஷேக் (10 இலட்சம்)

வீரங்கனைகளின் ஏல தொகை அனைத்தும் இந்திய ரூபாய் மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஜனவரி மாதத்தின் சிறந்த வீரராக கில்!

டுபாய், பெப். 15

கடந்த ஜனவரி மாதத்துக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக இந்திய அணியின் இளம் வீரர் ஷூப்மன் கில்லை அறிவித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி).

இதற்கான பரிந்துரையில் நியூசிலாந்து வீரர் டேவன் கொன்வே மற்றும் இந்திய வீரர் முகமது சிராஜ் ஆகியோர் இருந்தனர். அவர்களை பின்னுக்கு தள்ளி கில் ஜனவரி மாத சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார்.

ஜனவரியில் 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 70, 21, 116, 208, 40 மற்றும் 112 ஓட்டங்களை எடுத்திருந் தார். 5 இருபது - 20 போட்டிகளில் விளையாடி 7, 5, 46, 7, 11 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதன் காரணமாக 23 வயதான அவர் இந்த ஜனவரி மாதத்துக்கான சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20 என மூன்று வடிவ கிரிக்கெட்டில் சதம் விளாசிய ஐந்தாவது இந்திய கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

மகளிர் பிரிவில் ஜனவரி மாத சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாக இங்கிலாந்து அணியின் கிரேஸ் ஸ்க்ரீவன்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் இளையோர் மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கி லாந்து அணியை இறுதிப் போட்டி வரை அழைத்து சென்றவர என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# ஆஸி. அணியில் குனேமன் சேர்ப்பு

புதுடில்லி, பெப். 15

இந்தியா - ஆஸி. அணிகள் போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக மோதி வருகின்றன. முதல் போட்டி யில் இந்தியாவின் சுழல் பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் படுதோல்வி அடைந்தது.

இந்த நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி வருகிற நாளை மறுதினம் டிலியில் தொடங்குகிறது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணிக்கு புதுமுக இடது கை சுழற்பந்து வீச்சாளர் மேத்யூ குனேமன் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளார்.

அணியில் இடம் பெற்றுள்ள சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்வெப்சனின் மனைவிக்கு குழந்தை பிறக்க இருப்பதால் அவர் விரைவில் தாயகம் திரும்புகிறார். இதை கருத்தில் கொண்டு குனேமன் அழைக்கப் பட்டுள்ளார்.

குனேமேன் இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டிலேயே விளையாட வாய்ப்பிருப்பதாக அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட் நேற்று தெரிவித்தார். (ஐ)

# மகளிர் ரி - 20 உலகக் கிண்ணம் அரையிறுதியில் இங்கிலாந்து!

கேப்டவுன், பெப். 15

அயர்லாந்துக்கு எதிராக திங்களன்று நடைபெற்ற 2ஆம் குழுவுக்கான ஐ. சி. சி. மகளிர் இருபது 20 கிரிக் கெட் போட்டியில் 4 விக்கெட்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இதற்கு அமைய தனது முதல் இரண்டு போட்டிகளி லும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அரையிறுதி வாய்ப்பை கிட்டத்தட்ட உறுதிசெய்துள்ளது.

அயர்லாந்தை 105 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்திய இங்கிலாந்து ஓரளவு சிரமத்திற்கு மத்தியில் 14.2 ஓவர்க ளில் 6 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயல் பட்டபோதிலும் முன்வரிசை வீராங்கனை அலிஸ் கெப்சி அரைச் சதம் குவித்ததன் பலனாகவே அந்த அணி வெற்றிபெற்றது.

ஆரம்ப வீராங்கனை சோபி டன்க்லி (4) ஆட்டமிழந் ததும் இங்கிலாந்து தடுமாற்றம் அடைந்தது. (4 - 1 விக்.)

ஆனால், மற்றைய ஆரம்ப வீராங்கனை டனி வியட் (16) அலிஸ் கெப்சி ஆகிய இருவரும் 2ஆவது விக் கெட்டில் பெறுமதிமிக்க 66 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்து அணியைப் பலப்படுத்தினர்.

22 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்ட கெப்சி 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 51 ஓட்டங்களைக் குவித்தார். இதன் மூலம் மகளிர் சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து சார்பாக அதி வேக அரைச்சதத்தை கெப்சி பூர்த்தி செய்து வரலாறு படைத்தார்.

மத்திய வரிசையில் அணித் தலைவி ஹீதர் நைட் (14), அமி ஜோன்ஸ் (12) ஆகிய இருவரும் ஓரளவு சிறப் பான பங்களிப்பை வழங்கினர். அயர்லாந்து பந்து வீச்சில் காரா மறே 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.



முன்னதாக அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்த அயர்லாந்து 18.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அயர்லாந்தின் முன்வரிசை வீராங்கனைகள் நால்வர் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய போதிலும் ஏனைய வர்கள் இரட்டை இலக்கத்தை எட்டாதது அதன் சரிவுக்கு காரணமானது.

13ஆவது ஓவரில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் இருந்த அயர்லாந்து கடைசி 8 விக்கெட்களை 25 ஓட்டங்களுக்கு இழந்தது.

துடுப்பாட்டத்தில் காபி லூயிஸ் 36 ஓட்டங்களையும் ஓர்லா ப்ரெண்டகாஸ்ட் 17 ஓட்டங்களையும் அமி ஹன்டர் 15 ஓட்டங்களையும் அணித் தலைவி லோரா டிலேனி 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து பந்துவீச்சில் சோபி எக்லஸ்டோன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் சாரா க்லென் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் சார்லி டீன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# தேர்தலை நடத்த பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்குவோம்!

## அநுரகுமார அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு, பெப். 15

**உள்ளூராட்சி சபைத் தேர்தலைநடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் கூறுகை யில்- எப்படியாவது இந்தத் தேர்தலை ஒத்திப்போட வேண் டும் என்பதில் இந்த அரசு குறி யாகவே இருக்கின்றது.

அதற்காக இதுவரை பல காரணங்களைக் கூறி வந்தது. இறுதியாக பணம் இல்லை என்று கூறி வருகின்றது.

இந்த அரசு தேவையற்ற விடயங்களுக்கு அதிக பணத் தைச் செலவு செய்கின்றது. வீண் விரயம் செய்கின்றது.

அமைச்சர்களின் எண்ணிக் கையை அதிகரித்து பணத்தை வாரி இறைக்கின்றது.

ஆனால், மக்களின் ஜனநா யக உரிமையான தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பணம் இல்லையாம். அது பொய்.

தேர்தலை ஒத்திப்போடுவ தற்காக அரசு இறுதியாக கையில் எடுத்திருக்கும் ஆயுதம் அது.

தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களை திரட்டி வீதியில் இறங் கிப் போராட்டம் நடத்துவோம். பணத்தை வழங்கும் வரை விட மாட்டோம்-என்றார். (அ)

# 13ஐ எதிர்க்க தொடங்கிய பின்னர் கொலை மிரட்டல்கள் வருகிறதாம்!

## சொல்கிறார் சுமணரத்ன தேரர்



மட்டக்களப்பு, பெப். 15

13ஆவது திருத்தத்தை எதிர்த்து குரல் கொடுக்க ஆரம் பித்த பின்னரே தனக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மங் கராமய, கெவிலியமடுவ அபிந வராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள் ளார்.

நேற்று முன் தினம் அதி காலை தன் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறும் சம்பவமும், இதன் தொடர்ச்சியென்றே அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் காலை இனந்தெரியாத ஆயுதக் குழு வொன்று விகாரைக்குள் புகுந்து தான் உறங்கிக் கொண் டிருந்த அறையை நோக்கி துப் பாக்கிப் பிரயோகம் செய்ததாக வும், மயிரிழையில் தான் உயிர் பிழைத்ததாகவும் அவர் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- நான் 30 வருடங்களாக மட்டக்களப்பு மங்களாராம விகாரையில் இருந்தேன். உக் கிரமான வடக்கு-கிழக்கு யுத் தத்தின்போது புலிகள் இயக்கத் தினர் கிராமங்களுக்கு வெளியே சண்டையிட்டபோதும் இங்கு தங்கியிருந்தேன்.

ஆனால் என் விகாரையை ஒரு தோட்டா கூட தாக்க வில்லை. 13ஆவது அரசியல மைப்புத் திருத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு நான் தலைமை தாங்கச் சென்ற நாள் முதல், தொலைபேசியில் தொடர்ச்சியாக எனக்கு கொலை மிரட்டல்கள் வருகின்றன.

நான் அந்த மிரட்டல் களுக்கு செவிசாய்ப்ப வன் அல்லன். மிக மோச மான போர்களின் போதும் மட்டக்களப் பில் அப்பாவி மக்களுடன் இருந்தேன். நேற்று காலை, விகாரை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. என் அறையில் ஒரு பக்கத்தில் கண்ணாடி ஜன்னல் உள்ளது. அந்த ஜன்னல் வழியே பாய்ந்த தோட்டாக்கள் நான் உறங்கிக் கொண்டிருந்த கட்டிலின் மேல் சுவரை தாக்கின. இன்னும் சற்று கீழிறங்கியிருந் தால் என் தலையை தாக்கியிருக்கும். சில நிமிடங்களில் துப்பாக்கியால் சுட்டவர்கள் ஓடிவிட்டனர். பின்னர் இது தொடர்பில் நான் பொலிஸாருக்கு அறிவித்தேன்.

மட்டக்களப்பில் உள்ள இந்த தொலைதூர கிராமத்தில் மக்களை வாழ வைக்கவேண்டும் என்பதற்காகவே நான் கெவிலி யமடு விகாரையில் தங்கியிருக் கிறேன். இந்தப் பண்ணையை நடத்த இரண்டு குளங்களை உருவாக்கினேன். பண்ணையில் 10-12 பேர் வேலை செய்கிறார் கள். நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் நான் தூங்கச் சென்றேன். அரைத்தூக்கத்தில் இருந்தபோது 03 துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

30 ஆண்டுகளாக என்னைக் கொல்ல முயன்றனர். கெவிலிய மடு அபிநவராமவுக்கு பொலிஸ் பாதுகாப்பு இருந்தபோதிலும் நான் பாதுகாப்பாக இல்லை. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் செயற்பாட்டிற்கு எதி ராக கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் எனக்கு அதிகளவான மரண அச்சுறுத் தல்கள் விடுக்கப்பட்டன. உன்னைக் கொன்றுவிடுவோம் என்று என தொலைபேசியில் தொடர்ந்து மிரட்டினர்.

எனது உயிருக்கு அச்சுறுத் தல் இருப்பதாக பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித்திருந்தேன். ஆனால் எனக்கு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை-என்றார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் யுவதி பலி; 2 இராணுவ சிப்பாய்கள் கைது!

கொழும்பு, பெப். 15

பொரளை, வனாத்தமுல்ல அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 25 வய துடைய பெண்ணொருவர் உயி ரிழந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ய இராணுவத்தினர் முற்பட்டதாகவும், இதன்போது அதிகாரி ஒருவரின் ஆயுதம் தற் செயலாக வெடித்து பெண் ஒருவரை காயப்படுத்தியதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

25 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் இரு இராணுவ வீரர்களை கைது செய்து மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)

# விபத்தில் பெண் பலி

கொழும்பு, பெப். 15

பெலியத்தை பகுதியில் நேற்று முச்சக்கரவண்டியொன்று விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

46 வயதுடைய பெண் ஒரு வரே விபத்தில் உயிரிழந்துள் ளார்.

முச்சக்கர வண்டியின் சார திக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையே விபத்துக்கு கார ணம் என கண்டறியப்பட்டுள் ளது.

சாரதி சிறுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ள நிலையில் விசார ணைகள் இடம்பெற்று வருகின் றன. (அ)

# இரண்டு நிலக்கரி கப்பல்களுக்கு கட்டணம் செலுத்தப்படவில்லை

கொழும்பு, பெப். 15

நாட்டை வந்தடைந்துள்ள 02 நிலக்கரி கப்பல்களுக்கான கட்டணம் இதுவரை செலுத் தப்படவில்லை.

கடந்த வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளில் நாட்டை வந்த டைந்த 02 கப்பல்களுக்கு கட்ட ணம் செலுத்த முடியவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவ னத்தின் தலைவர் ஷேஹான் சுமனசேகர குறிப்பிட்டார்.

இந்த இரு கப்பல்களுக்கு முன்னர் நாட்டை வந்தடைந்த கப்பலொன்றிலிருந்து நிலக்க ரியை தரையிறக்கும் பணிகள் நேற்று முன் தினம் முன்னெடுக் கப்பட்டன.

நிலக்கரி கொள்வனவிற்காக இலங்கை மின்சார சபை நேற்று முன் தினம் ஒரு தொகைப் பணத்தை வழங்கிய போதிலும், அந்த பணம் போதுமானதாக இல்லை என ஷேஹான் சுமன சேகர தெரிவித்தார். (அ)

# 13ஐ ஆதரிக்கின்றோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, பெப். 15

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக் கும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

13 என்பது அரசியல மைப்பின் ஓர் அங்கமாகும். அதனை எதற்காக எதிர்க்க வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சார்பான ஓரிரு பிக்குகளே 13 இற்கு எதிராக போராட்டம் நடத்துகின்றனர் எனவும் கிரியல்ல சுட்டிக் காட்டினார். (அ)

# நீதிபதியின் உத்தியோகபூர்வக் காரை கொள்ளையிட்டு சென்றவர் சிக்கினார்!

கொழும்பு, பெப். 15

குளியாப்பிட்டிய நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதி பதியின் உத்தியோகபூர்வ காரை கொள்ளையடித்த சந்தேக நபர் வத்தளை ஒலிமுல்ல பிரதேசத் தில் வைத்து கைது செய்யப்பட் டதாக கல்கிஸ்ஸ பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித் துள்ளது.

கொள்ளையிடப்பட்ட காரும் பொலிஸ் காவலில் எடுக் கப்பட்டுள்ளது. சந்தேக நபர் தங்கியிருந்த ஹோமாகம உடு வான பகுதியில் உள்ள வீட்டை சோதனையிட்டபோது, சந்தேக நபர் கொள்ளைச் சம்பவங்க ளுக்கு பயன்படுத்திய இரண்டு போலி கைத்துப்பாக்கிகள் கண் டெடுக்கப்பட்டன. அத்துடன், நான்கு கத்திகள், ஒரு போத்தல் விசம், மிளகாய் பொடி அடங் கிய பையையும் பொலிஸார் கைப்பற்றினர்.

காரை ஒப்படைப்பதற்கு ஐந்து இலட்சம் ரூபா பணம் கேட்டு நீதவானிடம் சந்தேக நபர் விடுத்த அழைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட் டார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீதவானின் சகோதரன் எனச் சந்தேக நபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பொலிஸ் அதிகாரியொருவர், அவசர நிலை காரணமாக நீத வான் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார் என்றும், கப்பம் தேவையென்றால் தன் னுடன் பேசுமாறும் குறிப்பிட் டுள்ளார்.அவர் சந்தேக நபரை சம்ம திக்க வைத்து வத்தளைக்கு அழைத்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலியமுல்ல பிரதேசத்தில் உள்ள பிரபல நிறுவனமொன் றுக்கு அருகில் உள்ள கடையின் பெயர் குறிப்பிட்டு, அங்கு பணத் துடன் நிற்பதாக பொலிஸ் அதி காரி குறிப்பிட்டதை நம்பிய அங்கு பணம் பெற வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். அவரிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் நீதவானின் காரும் கைப்பற்றப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நீதவா னின் கார் கொள்ளையிடப்பட் டிருந்தது. பிலியந்தலை, மட பாத பகுதியில் உள்ள அவரது சொகுசு வீட்டை வாடகைக்கு விடுவதாக நீதவான் இணைய தளத்தில் விளம்பரம் செய்ததை யடுத்து, சந்தேக நபர் வீட்டை பார்க்க வருவதாக குறிப்பிட்டி ருந்தார்.கீழ் மாடியை பார்த்து விட்டு, மேல் மாடியை பார்த் துக் கொண்டிருந்தபோது, நீத வானை மேல் மாடி பல்கனியில் வைத்து பூட்டி விட்டு, கீழே இறங்கி வந்து, காரை திருடிக் கொண்டு தப்பிச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 13ஆம் திருத்தம்...

இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமானால் நாட்டில் உறுதிப்பாடு அவசியம் என்ற உறுதியான நிலைப்பாட்டை அரசாங்க தலைவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுதந்திரதின உரையிலும் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை தொடக்கிவைத்து நிகழ்த்திய கொள்கை விளக்க உரையிலும் நாட்டின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தேசிய நல்லிணக்கச் செயல்முறையை பலப்படுத்தவேண்டிய தேவை மீது விசேட கவனத்தைச் செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

இது தொடர்பிலான தனது ஈடுபாட்டை நாட்டின் வட பகுதியிலும் தேசிய மற்றும் சர்வதேச சமூகங்களுக்கும் உறுதிப்படுத்தியிருக்கிறார். இந்த பிரச்னைகள் தொடர்பில் பகிரங்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கும் ஜனாதிபதி அரசமைப்பின் 13ஆவது திருத்த விவகாரத்தில் புரிந்துணர்வுடனும் ஒருவகை துணிச்சலுடனும் வெளிப்படையாக முன்னுதாரணமான முறையில் பேசியிருக்கிறார். மற்றைய தேசிய அரசியல் தலைவர்கள் இன்னமும் அவ்வாறு செய்வில்லை.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பரவலாக்குவதில் ஜனாதிபதியின் ஈடுபாடு நாட்டுப் பிரிவினையை நோக்காய ஒரு முதலபடியாக காண்பிக்கப்படுவதை கண்டு தேசிய சமாதான பேரவை பெரும் கவலையடைகிறது.

13ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் நிலவும் தப்பு எண்ணங்களையும் போலி வாதங்களையும் நாடளாவிய ரீதியிலான அறிவூட்டல் செயல்திட்டம் ஒன்றின் ஊடாக அகற்றவேண்டியது அவசியம் என்று நாம் நம்புகிறோம்.

தென்னாபிரிக்காவிலும் வட அயர்லாந்திலும் நிலவிய நெருக்கடிகளுக்கு அரசியல் தீர்வுகள் காணப்படுவதற்கு கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறைகளை நாமும் பின்பற்றவேண்டும். அந்த நாடுகளில் பிரச்னைகள் மக்கள் மத்தியில் நீண்ட பேச்சுகளுக்கு உட்படுத்தப்பட்டு வகுக்கப்பட்ட அரசியல் தீர்வுகளை மக்கள் இறுதியில் ஏற்றுக்கொண்டார்கள்.

மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் ஜனநாயகத்திலும் ஆட்சி முறையிலும் தனிநபர்களும் சமூகங்களும் பங்கேற்பதற்கான சமவுரிமையை மதிப்பது பற்றியதே அதிகாரப் பரவலாக்கமாகும். உள்ளூராட்சி தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்படுவதற்கு உறுதுணையாக இருக்குமாறு தேசிய சமாதான பேரவை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

தேர்தல் பிரசாரங்களின்போது மக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் இனவாத பிரசாரங்களை முன்னெடுக்காதிருக்குமாறு எதிரணி அரசியல் கட்சிகளிடம் வேண்டிக்கொள்கிறோம்.

உரிய காலத்தில் தேர்தல்களை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்துவது ஜனநாயக செயல்முறையின் மைய அம்சமாகும்.

அரசமைப்பால் வழங்கப்பட்டிருக்கின்ற ஆணையின் பிரகாரம் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கும் அதிகாரத்தை அங்கீகரித்த உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை நாம் வரவேற்கிறோம்.

தேர்தல் ஆணைக்குழு ஒரு கொடுப்பனவை செய்யும் வரை வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகர் தெரிவித்திருக்கும் மறுப்பு அபத்தமானது. தேர்தல் ஆணைக்குழுவும் அரசாங்க அச்சகமும் அரச நிறுவனங்களே. ஜனநாயக செயல்முறைகளை நலிவுறாது நீடிக்கச்செய்வதை விட வேறு எதுவும் பெரும் முன்னுரிமைக்குரிய விவகாரமாகி விடமுடியாது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை மதித்து இந்த பிரச்னைக்கு தீர்வைக் கண்டு, தேர்தல் ஆணைக்குழு பிரகடனம் செய்தவாறு மார்ச் 9 உள்ளூராட்சி தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதை உறுதிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் - என்று கூறியுள்ளது. (ஐ)

## இலங்கை...

இதேசமயம், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை தொடர்பில் விரைவில் புதுடில்லி செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்துவார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக அதிகரித்தே உள்ளது. இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல்களுக்கு எதிராக தமிழ் மீனவர்கள் அடிக்கடி போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். எனவே, அமைச்சரின் இந்தக் கருத்து தொடர்பில் அறிய முயன்றபோதும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில், ஈ. பி. டி. பி. கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சரின் ஆலோசகருமான சி. தவராசாவை தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்து கேட்டபோது,

“இந்திய மீனவர்கள் நாட்டுப் படகுகளில் பாரம்பரியமான முறைகளை பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுவதை அனுமதிப்பது குறித்து அமைச்சர் முன்னரும் பல இடங்களில் கூறியுள்ளார். - எனினும், கொழும்பு, ஆங்கில நாளிதழ் வெளியிட்ட தகவல் தொடர் பில் நான் அறியவில்லை.”, என்று தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை வந்த இந்திய அமைச்சருடன் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதிப்பது குறித்து பேசப்பட்டதையும் அவர் உறுதிப்பபடுத்தினார். (ஐ)

## அவசிய...

முன் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

நோயாளிகளின் உயிரைப் பாதுகாக்கும் வகையில் தற்போதுள்ள மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறைக்கு உடனடி தீர்வை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளேன்.

மேலும், சத்திர சிகிச்சைகளை கால தாமதம் செய்வதன் மூலம், அத்தியாவசியமற்ற அறுவை சிகிச்சை என்றுகூறி நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படவுள்ளது. பொழுது போக்குக்காக அறுவை சிகிச்சைகள் செய்வதில்லை. சில அறுவை சிகிச்சைகளை நொடிப் பொழுதுகளில் செய்ய வேண்டும் - என்றும் கூறினார். (ஐ-சி)

## கருணாவின்...

மட்டக்களப்பு - தொப்பிகலவில் உள்ள வயல் காணியில் சட்டவிரோதமாக போடப் பட்டிருந்த மின்வேலியில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்தார்.

இந்த வயல் முன்னாள் பிரதி யமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு சொந்தமானது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மின்வேலியில் சிக்கி உயிரிழந்தவரின் உடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது. (ஐ)

# கசிப்பு காய்ச்சிய வேட்பாளர் கைது

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கசிப்பு காய்ச்சும்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரத்தின் திறப்பனை என்ற பிரதேசத்தில் வைத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்ப டையில் இந்த நபர் கைது செய்யப் பட்டார். மூன்றே முக்கால் லீற்றர் கசிப்பு மற் றும் 180 லீற்றர் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்தனர்.

## நிதி...

கோர முடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம் பெற்ற சந்திப்பின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல் தாமதமாகலாம் எனவும் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (அ)

## படகு...

ஞாயிறுக்கிழமை வடமராட்சி கிழக்கு, குடாரப்பு கடற்பரப்பில் மீன்பிடிக்க படகில் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் படகு கவிழ்ந்துள்ளது. ஒருவர் நீந்திக் கரை சேர்ந்த நிலையில் மற்றவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தார். இவரின் சடலம் நேற்று குடாரப்பில் கரையொதுங்கியது. (ஐ-2)

## அனைவரும்...

எதிராக ஆரம்பித்த போராட்டங்களை அடுத்து கடந்த மே 9ஆம் திகதி பதவி விலகினார்.

இந்நிலையில், தற்போது பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தர்கள் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோகித அபேகுணவர்த்தன, சனத் நிசாந்த உள்ளிட்டோரே இதற்கான வேலைத்திட்டத்தை மும்முரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இவர்களின் இந்த முயற்சிக்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. ராஜபக்ஷக்கள் மீதான எதிர்ப்பு அலை மாறவில்லை என்பதே எதிர்ப்போரின் வாதமாக உள்ளது.

இது தொடர்பில் இரு தரப்பினரும் மகிந்த ராஜபக்ஷவுடன் பேசி வருகின்றனர். இந்நிலையிலேயே, “நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்தால் தீர்மானம் எடுக்க தயார் என்று அவர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார் என்று நம்பகமாக அறிய வருகின்றது. (ஐ - சி)

## தபால்மூல...

தெரிவித்தார்.

தபால் மூல வா க்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

முன்னதாக திட்டமிட்டபடி, தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகள் விநியோகம் இன்றைய தினம் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தது.

இதற்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படவில்லை. வாக்குச்சீட்டுகள் அச்சிடுவதற்கான பணத்தை முழுமையாக செலுத்தினால் மட்டுமே அச்சிடப்படும் என்று எழுத்துமூல உத்தரவை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரச அச்சக கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

இந்தப் பின்னணியிலேயே தபால் மூல வாக்களிப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால், அறிவிக்கப்பட்டபடி மார்ச் 9ஆம் திகதி தேர்தல் நடைபெறுவது சந்தேகமே. எனினும், இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்...

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

45 உறுப்பினர்களை கொண்ட சபையில் 40 உறுப்பினர்களே பங்கேற்றனர்.

வரவு - செலவு திட்டத்திற்கு 16 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும், மணிவண்ணன் அணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ. பி. டி. பி. ஆகியவை எதிராக வாக்களித்தன. எதிராக 24 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் 8 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

முதல்வர் ஆனல்ட் இன்னும் இரு வாரங்களில் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். இதுவும் தோல்வியடையும் பட்சத்தில் அவர் பதவியை இழப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## உள்ளூராட்சி...

நிறுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இங்கு கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர், தமக்கு தேவையான பணம் கிடைக்கவில்லையென்றும் 10 கோடி ரூபாய் பணமே கிடைத்ததாகவும், பணம் முழுவதுமாக கிடைத்த பின்னரே வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை ஆரம்பிக்கும்படி தனக்கு கூறப்பட்டுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் நடக்குமா நடக்காதா என்பதை உறுதியாக அறிவிக்குமாறு கட்சிகளின் பிரதிநிதிகள் கேட்டபோது, அது பற்றி தன்னால் உத்தரவாதம் வழங்க முடியாதென அவர் தெரிவித்தார்.

நாளையே பணம் வழங்கப்பட்டால், தேர்தல் பணிகளை ஆரம்பிப்போம் என்றார்.

பணம் தட்டுப்பாடெனில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட தரப்பினரிடம் பணம் சேகரித்து, தேர்தலை நடத்தலாமென கட்சிகளின் பிரதிநிதிகள் சிலர் யோசனை சொன்னார்கள்.

அப்படி பணம் சேகரித்து தேர்தல் நடத்தும் அதிகாரம் தமக்கு கிடையாதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். அவ்வாறாயின், ஒவ்வொரு மாவட்டமாக தேர்தலை நடத்துமாறு கட்சிகள் யோசனை தெரிவித்தன.

அது குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து கருத்து தெரிவிப்பதாக ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார். சட்டமா அதிபர் தம் சார்பில் வழக்குகளில் முன்னிலையாவது இல்லையென்றும், தனியார் சட்டத்தரணிகளின் மூலமே வழக்குகளில் முன்னிலையாவதாக ஆணைக்குழு தலைவர் தெரிவித்தார்.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்-

உயர்நீதிமன்றத்துக்கு கொடுத்த உத்தரவாதத்தில் இருந்து பின்வாங்க வேண்டாம் என்று நாங்கள் அவரிடம் சொன்னோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும் என உயர் நீதிமன்றில் உறுதியளித்த அவர், அவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுமாறு கூறினோம்-என்றார்.

“சட்டமா அதிபரிடமிருந்து தனக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று ஆணைக்குழுவின் தலைவர் எங்களிடம் கூறியதுடன், இந்த விவகாரத்தை மீண்டும் ஒருமுறை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்புவேன் என்றும் குறிப்பிட்டார்,” என மத்தும பண்டார மேலும் கூறினார்.

திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படமாட்டாது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# 38 மில்லியன் டொலர்களை வழங்கியது ஜப்பான் அரசு!

## சுகாதார சேவைகளை மேம்படுத்த

கொழும்பு, பெப். 15

அத்தியாவசிய மற்றும் அவசரகால சுகாதார சேவைகள் தடையின்றி செயல்படுவதை உறுதி செய்வதற்காக 38 மில்லியன் அமெரிக்க டொலரை மானியமாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கூறிய அமைச்சர், அத்தியாவசிய சேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் சுகாதாரத் துறையின் சுகாதார விநியோக முறையை மேம்படுத்துவதற்காக ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 5 பில்லியன் ஜப்பானிய யென்னை (சுமார் 38 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் இணங்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மற்றும் அவசரகால சுகாதார சேவைகளை தடையின்றி இயக்குவதை உறுதி செய்வதற்காக, எரிபொருளை முக்கியமாக டீசல் வழங்குவதற்காக இந்த மானியம் வழங்கப்படுகிறது - என்றார். (அ)

# தேர்தல் நடத்தக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு கிடையாது!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, பெப். 15

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக்கூடாது என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஆனால் நாட்டின் தற்போதைய உண்மையான நிதி நிலைமை குறித்து திறைசேரி செயலாளர் நீதிமன்றில் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த அரசாங்கங்கள் வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக்கொண்டு பணத்தைச் செலவிட்டன.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தினால் அவ்வாறு செய்ய முடியாது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# 13ஐ முழுவதும் அமுல்படுத்துவதாக ஆளும் கட்சி உறுதியளிக்கவில்லை!

## கூறுகிறார் பெரமுனவின் பொதுச் செயலர்

கொழும்பு, பெப். 15

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ஆளும் கட்சி மக்களுக்கு வாக்குறுதி வழங்கவில்லை என அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கே முழுமையான ஆதரவு வழங்குவோம் என்பதனால் அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியால் தனித்து எவ்வித தீர்மானமும் எடுக்க முடியாது என்றும்,

அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், மக்கள் வாக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அமரகீர்த்தி கொலை வழக்கு விசாரணைகளில் நெருக்கடி

கொழும்பு, பெப். 15

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் கொலை வழக்கு விசாரணைகளில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டு அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு போதியளவு இரசாயனப் பொருட்கள் கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சந்தேக நபர்களிடம் மரபணு பரிசோதனை நடத்த இந்த இரசாயன வகைகள் தேவை எனவும், அதற்கான தட்டுப்பாடு வழக்கு விசாரணைகளை பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை செய்யப்படும் அத்தனகல்ல நீதிமன்றில் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குடன் தொடர்புடைய 42 சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (அ)

# கடன் கோரும் இலங்கை பங்கேற்கும் வட்டமேசைக் கூட்டம் வெள்ளியன்று!

கொழும்பு, பெப். 15

கடன் கோரும் இலங்கை பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில், சீனா, இந்தியா, சவூதி அரேபியா மற்றும் ஏழு நாடுகளின் குழுவின் அதிகாரிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதிய இறையாண்மைக் கடன் முதல் மெய்நிகர் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியா, சாம்பியா மற்றும் கானா ஆகிய 20 பொதுவான கட்டமைப்பின் கீழ் கடன்களை கோரிய நாடுகளின் அதிகாரிகளும், தங்கள் சொந்த கடன் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கை, சூரினாம் மற்றும் ஈக்குவடோர் போன்ற நடுத்தர வருமான நாடுகளின் அதிகாரிகளும் இந்த வட்டமேசை மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த கூட்டம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஜி-20 குழுவின் தற்போதைய தலைவரான இந்தியா ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்படும்.

மேலும் ஜி-20 நிதி அதிகாரிகள் எதிர்வரும் 23 -25 ஆம் திகதி வரை வட்டமேசையின் நேரடி சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

வட்டமேசையில் அதிகார பூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் துறை பங்கேற்பாளர்களின் பாரிஸ் கிளப் அதிகாரிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இன்ஸ்டிடியூட் ஒவ் இன்டர்நஷனல் பினான்ஸ், சர்வதேச மூலதன சந்தைகள் சங்கம் மற்றும் அடையாளம் காண வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட இரண்டு தனியார் துறை நிதி நிறுவனங்களும் அதில் பங்கேற்கவுள்ளன. (அ)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதிச் சுதந்திரம் அவசியம்!

## வலியுறுத்துகின்றது பவ்ரல்

கொழும்பு, பெப். 15

வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தடையாக செயற்பட்டு வருகின்றது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன.

வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பொருளாதாரத்தை சுட்டிக்காட்டி அதற்கான நிதியை வழங்க மறுப்பதன் வாயிலாக அரசாங்கம் தேர்தலுக்கு தடையாக செயற்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றிலும் பிரதிபலிப்பதற்கான அபாயம் காணப்படுகின்றது.

PAFFREL

ஜனநாயகத்தை நிலைநிறுத்த அரசாங்கம் தன்னிச்சையாக முன்வந்து தேர்தல் ஆணைக்குழு வுக்கு நிதிச் சுதந்திரத்தை வழங்கி தேர்தலை நடத்தவேண்டும்.

அவ்வாறில்லையாயின் எதிர்காலச் சந்ததியினரை இந்த நடவடிக்கை வெகுவாக பாதிக்கும்- என்றார். (அ)

# 20 இலட்சம் குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் அரிசி!

## ரணிலின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 15

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 20 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் அரிசியை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலேயே இவ்வாறு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 18, 000 பேருக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியத் தொகையை கட்டம் கட்டமாக வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.